ISSN NO: 2012 - 6352

# தொண்டன்

நவம்பர் 2009

ஆரம்பம் : 1969 பெப்ரவரி

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

25/=




## தோட்டத் தொழிலாளர்கள் 500 ரூபாய்தானே கேட்கிறார்கள்!

## கப்பலில் இலங்கைத் தமிழ் அகதிகள்!

## எங்கு மனிதன் மரணித்தாலும் அந்த இழப்பு ஈடு இணையற்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


நவம்பர் - 2009

மலர்: 41 இதழ்: 10


**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**ஓவியங்கள்**
சுதா

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | : | 01 |
| வாழ்வுத் தேடல் | : | 02 |
| மூன்று கிறித்தவ... | : | 04 |
| பனிச்சங்கேணியில்... | : | 06 |
| உலகத் தமிழாராய்ச்சி... | : | 09 |
| உங்கள் சுகமான... | : | 12 |
| அஸ்மா நோயாளிகளே... | : | 13 |
| மாணவர் பக்கம் | : | 15 |
| உலக அதிசயங்கள்... | : | 16 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | : | 18 |
| கனவுகள் உதிர்ந்தபோது... | : | 20 |
| இலக்கிய மஞ்சரி | : | 23 |
| கடுகுக் கதை | : | 24 |
| றொபட் நொக்ஸ்... | : | 25 |
| விவிலியம் கற்போம் | : | 27 |
| அறிவை வளர்ப்போம் | : | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

இன்று இறப்புகள் சர்வசாதாரணமாக உணரப் படுகின்ற அளவுக்கு மனித மனங்கள் இறுக்கமாகப் போய்விட்டன. உலகம் சுருங்கி ஒரு சிறிய கிராமமாக ஆக்கப்பட்டதன் விளைவாகக்கூட இது இருக்கலாம்; அதாவது உலகமயமாக்கப்பட்டதன் எதிரொலி.

இயற்கை அனர்த்தங்கள், தனிப்பட்ட குரோ தங்கள், சமூகங்கள், இனங்கள், மதங்களுக்கிடை யிலான வெட்டுக் குத்துகள், நாடுகளுக்கிடையிலான போர் முஸ்தீபுகள், பயங்கரவாத வக்கிரங்கள் மற்றும் பல்வேறுபட்ட விபத்துகள் என்பவற்றை நாளுக்கு நாள் ஏன் நிமிடத்துக்கு நிமிடம் பார்ப்பதாலும் கேட் பதாலுமே மனங்கள் மரத்துப்போய் மரணங்கள் ஏற் படுத்தும் இழப்பை பெரிதுபடுத்தாமல் இருப்பதற்குக் காரணமாய் அமைந்துவிட்டன எனலாம்.

ஆனால் ஒவ்வொரு மனிதனும் இறைவனின் கைவண்ணம். இறைவனை மனிதனில் காண வேண்டும். ஆக தனிமனிதச் சுதந்திரம் பேணப்பட வேண்டும். எப்பேற்பட்ட காரணத்தினாலோ ஒருவர் இறந்தால் அந்த இழப்பை உலகம் பூராகவும் உணர்ந்து வேதனைப்படுவதால் மனிதத்துவம் இன் னும் இறக்கவில்லை என நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

இன்று இலங்கைத் தமிழ் அகதிகள் கப்பலில் இருந்தவண்ணம் தஞ்சம் கேட்டுத் தவிக்கின்றனர். தமக்கான வாழ்வுரிமையைக் கேட்கிறார்கள். வல் லரசுகள், தனிமனித சுதந்திரத்தைப் பற்றி பேசுகின்ற நாடுகள் இவர்களைக் கையேற்க ஏனோ தேவையற்ற சாக்குப்போக்குகளைக் கூறுகின்றன.

இலங்கையில் அவர்களால் வாழமுடிந்தால் இப்படிக் கப்பலில் தப்பிச்செல்ல முனைந்திருப்பார் களா? புலி உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்ப தற்காக அவர்களை ஓரங்கட்டலாமா? புலி உறுப் பினர்களும் தங்கள் வாழ்வை வளப்படுத்தத்தானே வேண்டும். இனங்காணப்பட்டவர்களுக்கான திட் டத்தைக் கையாண்டு ஏன் வாழவைக்கக் கூடாது? சர்வதேசமே! இலங்கையில் இன்னும் நல்வழி பிறக்க வில்லை. தமிழர்களை ஏற்றுக்கொள்! வாழ்வு கொடு!

ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா இருந்தாலே குடும்பத்தைக் காப்பாற்றமுடியாது. தோட்டத் தொழி லாளர்கள் வெறும் ஐநூறு ரூபாய்தானே கேட்கின் றார்கள். ஒரு நாள் சம்பளமாக அதைக்கூட தொழிற் சங்கத்தால் பெற்றுக் கொடுக்க முடியாதிருக்கிறதே! முதலாளிகள் என்றாலே இலாபத்தை மட்டும் விழுங் கும் முதலைகள்தானே!

இலங்கைப் பொருளாதாரத்தில் பெரும் பங் காற்றும் இந்த ஏழைத் தொழிலாளிகள் மேல் ஏன் அரசாங்கம்கூட தலையிடாமல் இருக்கிறது? வாக்கு வங்கியையே குறிபார்த்துச் செயற்படும் அரசியல் கட் சிகள் இவ்விடயமாக சதுரங்க ஆட்டத்தில் குதித்தி ருப்பதுதான் வேதனைக்கு மேல் வேதனை. மின்னல் ஸ்ரீரங்கா தன் நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்களை இவ்விடயம் சம்மந்தமாக துவம்சம் செய்து உண் மையை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவது வர வேற்கத்தக்க விடயம்.

மனிதமாண்பு எங்கு மறுக்கப்பட்டாலும் அதைத் தட்டிக்கேட்டு மனிதத்தின் கௌரவத்தைப் பேணுவோம். எங்கு மனிதன் மரணித்தாலும் அந்த இழப்பு ஈடு இணையற்றது என மனதார உணரு வோம். உயிர்ப்புண்டு என விசுவசிப்போம். ஒருநாள் சந்திப்போம் இறைசந்நிதானத்தில்!!!

- ஆசிரியர்



## இறைவாக்கு

**"மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்"**

(மத்தேயு: 25:45)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# வாழ்வுத் தேடல்

இது கார்த்திகைத் திங்கள். இறந்து போனவர்களை நினைந்து இக்காலத்தில் சிறப்பான விதத்தில் ஆராதனைகள், வழிபாடுகள், தானதர்மங்கள் செய்யப்படுகின்றன.

இறந்துபோனவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும், அவர்களது இவ்வுலக வாழ்விலே அவர்கள் புரிந்த குற்றங்களை எல்லாம் இறைவன் மன்னித்து அவர்களுக்கு நிறைவாழ்வை அளித்திடவேண்டும் என்றும் இறைஞ்சப்படுகிறது.

கல்லறைகளைச் சுத்தஞ் செய்வது, மலர்களால் அலங்கரித்து வண்ணச் சாந்துகள் பூசி, மெழுகுதிரி எரித்து தம்மவர்களுக்காக வேண்டிக்கொள்வதும் பிரிவுத் துயரால் வருந்தி கண்ணீர் சொரிவதும் இம்மாதத்திலே நாம் காணும் காட்சிகள்.

இறப்பைக் கடந்த ஒரு வாழ்வில், நிறை வாழ்வில் நாம் நம்பிக்கை கொண்டிருந்தாலும், அந்த வாழ்வு இறைவனோடு வாழும் வாழ்வு என்று நாம் கூறிக்கொண்டாலும் சாவு என்பது மனித நெஞ்சுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் துயரத்தையே எப்போதும் தருகிறது. வாழ்வின்மீது கொண்டுள்ள தாளமுடியா ஆசை, மனிதனுக்கு தான் கொண்டுள்ள நம்பிக்கைகள், தான் ஏற்றுக்கொண்டுள்ள உண்மைகளைக்கூட இரண்டாம் இடத்திற்குத்



தள்ளிவிடுகிறது. ஒருவகையில் மனிதன் தனக்குத்தானே பொய்யாகிப் போலியாகிப் போகிறான்.

பிறத்தல் - வாழ்தல் - இறத்தல் இவை இந்தப் பிரபஞ்சத்தின் இடையறா நிகழ்வுகள். ஒன்றுக்கொன்று முந்தலாம் பிந்தலாமே அன்றி இவற்றினின்று எதுவுமே விடுபட்டுவிட முடியாது. தவிர்க்க முடியாத இந்நிகழ்வுகளின் இயக்கத்தை, இயல்பை, உண்மையைத் தெளிந்து ஏற்றுக்கொண்டோர் அளவுக்கதிகமாக மகிழ்ந்து குதிக்கவும் மாட்டார்; வருந்தி அழுது குலுங்கவும் மாட்டார்.

காலை மலர்ந்து மணம் பரப்பி, தேன் பிலிற்றி, அழகால் மகிழ்வளித்து மாலை வாடி வீழும் ஒரு மலர்கூட தன் வாழ்வில் நிறைவு காண்கிறது. அந்த நிறைவு 100 ஆண்டுகள் வாழும் ஒரு மனிதனுக்குக் கிடைக்கிறதா என்பது எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்றுதான். ஏனென்றால் வாழ்வின் மீதுள்ள தணியாத ஆசை வாழ்வின் இயல்பை மறக்கச் செய்து மனதைப் பேதலிக்க வைத்துவிடுகிறது. சுயநலத்தின் காரணமாக பொங்கி எழும் பேராசை பல்வேறு வகையிலும் அறிந்தும் அறியாமலும் குற்றங்களுக்குள் வீழ்த்தி, மனித மனத்தை அலைக்கழித்து அவலப்படுத்துகிறது. இந்நிலையில் வாழ்வின் இயல்பை, அதன் தாற்பரியத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் கற்பிதங்களுக்குள் தன்னைப் புதைத்துக்கொண்டு மானுடம் அமைதி காண முனைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சாவு என்பது எவ்வளவு இயல்பானது, நிச்சய மானது, உண்மையானது என்பதை இயேசுவின் சாவிலே நாம் காண்கிறோம். இறைவன், இறைமகன் என்று நாம் பணிந்து வணங்கி ஆராதிக்கும் இயேசுவே இறந்தார். ஆயினும் மீண்டும் அவர் உயிர்த்தார் என்று நம்புகிறோம். இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக இருப் பது முக்கியமாக அவரது வாழ்வு, வார்த்தைகள். அவர் வாழ்வில் சந்தித்த சோதனைகள், கவலைகள், துன்பங்கள், பழிப்புகள், அவமானங்கள் அனைத்தி னூடாகவும் அவர் இறந்தார். அவைகளைத் தந்தை யின் துணையுடன் வெற்றிகண்ட போதெல்லாம் அவர் உயிர்த்தார். இந்த இடையறா தொடர் போராட் டத்தின் உச்சத்தையே உயிர்ப்பென்று நாம் விசுவசிக் கின்றோம். இயேசுவில் நாம் காணும் இந்த வாழ்வின் யதார்த்தத்தை நாம் விளங்கி நமதாக்கிக் கொள் வதன் மூலமே நமது வாழ்வின் மெய்மையை நோக்கி நாம் வளர முடியும். கல்லறைத் திருநாள் கண்ணீர் சிந்தி அழவும் கல்லறைகளை அலங்கரிக்கவும் மட்டு மல்ல, அதையும் தாண்டி வாழ்வு பற்றிய ஒரு தேடலுக்கு நம்மை அழைக்கிறது. வாழ்வின் இயல்பைப் புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ளவும் நாளாந்த வாழ்க்கை அனுபவங்களூடாக நிறைவாழ்வை நோக்கி நடக் கவும் நாம் துணிய வேண்டும்.

● **இன்பம்**



## குறும்(புப்)பா - 27

நேரத்தை விழுங்கியது வரிசை

நின்றதுநான் வங்கியின்பின் வரிசை

ஓரத்தே ஒருகை ஒழுங்கற்று உள்நுழைந்து

சாதித்துப் பெற்றதாம் பரிசை!

~ **மலர்** ~

# பேரம்பலத்தார்

பேரம்பலத்தாருக்கு அறுபத்துமூனு வயசு. கொலஸ்ற்றோல், பிரசர் என்று படுத்த படுக்கையாகிப் போனார். காலை ஆறு மணிக்கே நெஸ்கொபி கொடுத்தாள் இளைய மகள். ஏழு மணிக்கு ஓடி வந்த மூத்த மகள் “அப்பா எப்பிடியப்பா இருக்கீங்க...? இந்தாங்க இடியப்பமும் இறால்சொதியும்... பிள்ளய ஸ்கூல்ல விட்டிற்று நானும் பள்ளிக்குப் போகோணும் நேரமாகுது வாறனப்பா...” என்றபடியே போனாள். “அப்பா சின்னவன நேசறியில விட்டிட்டு மரக்கறிகளும் வாங்கிற்று வாறனப்பா...” என்றபடியே இளைய மகள் வெளியேறினாள். சுகம் விசாரிக்க வந்த நண்பனிடம் “என்ர ரெண்டு மகள்மாரும் எப்பிடிப் பராமரிக்குதுகள் தெரியுமா? நான் குடுத்து வெச்சவன். புள்ளப்பெத்தா இப்பிடி தங்கமான பிள்ளயளத்தான் பெறவேணும்” பெருமை பேசினார். பத்து மணியளவில் பிரசர் கூடி மயங்கிக் கிடந்தார். மார்கட் போன மகள் வந்தாள். மரணித்துப் போனதாய் நினைத்துக் கதறினாள். மூத்தவள் அலறியபடி ஓடிவந்தாள். அழுது புரண்டார்கள். நேரம் பதினொன்று... அப்பாவின் காதுக் கடுக்கண், கழுத்துச் செயின், வயல் காணி ரெண்டு ஏக்கர், வேப்பயடி வளவு பற்றி விசாரித்தார்கள். ஆளையாள் திட்டி அவதூறு பேசினர். கிழட்டுக் கிழவன் அநியாயம் செய்ததாய் மாறி மாறி வசை பாடினர். மயக்கம் தெளிந்த பேரம்பலத்தார் காதுகளுக்குள் காய்ச்சிய ஈயம் ஊற்றியதுபோல் எல்லாம் கேட்டார். உள்ளம் உடைந்தது. இப்பேர்ப்பட்ட பிள்ளைகளைப் பெற்றதற்காக வருந்தியபடியே வாய் திறந்தார். வேதனையைச் சுமந்தபடியே அப்போதுதான் அவர் மூச்சு ஓய்ந்தது.



– **பைந்தமிழ்க்குமரன் டேவிட்** –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மூன்று கிறித்தவ தமிழ் இலக்கிய நூல்களின் நூலாராய்வு 05

நான்காவது; தமிழ் மொழிக்கு அவர் செய்த இலக்கண ஆக்கம் எனலாம். அகத்தியத்தின் பின்னர் தொல்காப்பியம் தமிழ் மொழிக்கு இலக்கணமாகத் தோன்றியது. பல நூற்றாண்டுகளில் தமிழில் ஏற்பட்ட ஏற்றம் தோற்றங்களுக்கு ஏற்ப நன்னூல் தமிழ் இலக்கணத் தேவையை நிறைவு செய்யத் தோன்றியது. நன்னூலின் தோற்றங்கூடப் பல நூற்றாண்டுகளைக் கடந்ததாலும் அதன் பின்னர் பல திசை மொழிகள், பல மதங்கள், பல பிற நாட்டவர் வாழ்க்கை முறைகள் ஆதியன தமிழுடன் இணைந்ததாலும் அதற்கேற்பத் தமிழ் மொழியின் இயல்புகளும் மாறத் தொடங்கின.

இதனால் தமிழ் மொழி இலக்கண மரபு அணை கடவாது இயல ஒரு புது இலக்கண நூலின் தேவையை உணர்ந்தார். அவ்வுந்துதலால், அவர் தொன்னூல் எனும் இலக்கண நூலைப் படைத்தார். அதுபோல ஐரோப்பியர் தமிழ் மொழியைத் தவறறக் கற்று, எழுதவும் உரையாடவும் துணை செய்வதற்காக மொழிகளில் தமிழ் இலக்கண நூல்களைப் படைத்தளித்தார். இவ்வாறு காலத்தின் தேவைக்கேற்ப தமிழ் மொழிக் காப்புக்குக் காப்பிட்ட பணி காலத்தாற் கரையாதது. அத்தகைய நூல்களின் விபரம், வெளிப்படுத்திய திறனையும் உணரலாம். அவற்றுள் சிலவற்றை அடியில் தந்துள்ளோம்

01. கொடுந் தமிழ் இலக்கணம் - இலத்தின் வழி 1728, மீள் பதிப்புகள் 1738, 1806, 1813 - ஹர்ச்சட்டின் ஆங்கில பெயர்ப்பு 1806 - மாகனின் ஆங்கிலப் பெயர்ப்பு 1834

02. செந்தமிழ் இலக்கணம் 1730 - பெபிங்கடனின் ஆங்கிலப் பெயர்ப்பு 1822, மீள் பதிப்பு 1822

03. கிளாவிஸ் 1876

04. தொன்நூல் 1730 - தொன்நூல் விளக்கம் (மூலமும் உரையும் சி, மெக்கன்சி அர்ச்சூசையப்பர் அச்சுக்கூடம் சென்னை 1891, 268 பக்கங்கள்)

ஒருவரின் மொழி அறிவின் சிறப்பாற்றல் அன்னாரது ஆக்கங்களால் வெளிப்படுகின்றது.


## 40 மொழிகளில் வத்திக்கான் வானொலி

Radio Vaticana

உலகில் இயங்கும் வானொலிகளில் அதிகமான மொழிகளில் ஒலிபரப்பை நடாத்துவது திருத்தந்தையின் வானொலியாகிய வத்திக்கான் வானொலியாகும். தினசரி 40 மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. சமயா சமய ஒலிபரப்பு மொழிகள் 07. ஓர் ஆண்டில் ஒலிபரப்பாகும் காலஅளவு ஏறத்தாள 28,500 மணித்துளிகள். ஒரு வாரத்தில் ஒலிபரப்பாகும் கால அளவு ஏறக்குறைய 480 மணித்துளிகள்.

1931ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வானொலியில் நிர்வாகத்தினர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பத் துறையினர் என ஏறக்குறைய 60 நாடுகளிலிருந்து சுமார் 400 பேர் பணியில் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் பொதுநிலையினரே. எனவே, திருத்தந்தையின் இவ்வானொலியை பல்வேறு நாட்டு மக்களைக் கொண்ட ஒரு மினி கத்தோலிக்க உலகம் என்று அழைக்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தகைய படைப்புகள் உரைநடையிலும் பார்க்கச் செய்யுள் நடையில் ஆக்கம் பெறும்போது அது மேலும் சிறப்புடைத்தாகின்றது. உரைநடை இலக்கியம் நெகிழ்வுடையது. ஆக்கியோனின் கருத்துகள் சிலபோது மாறத்தக்கதாக அமைவது. ஆனால் செய்யுள் நடையில் அவ்வாறின்று. கருத்து மட்டுமல்ல, அதில் எடுத்தாளப்பட்ட சொற்களில் கூட மாற்றங்கள் நிகழ்வது அரிது.

காரணம் செய்யுள் யாப்பு அத்தகைய மாற்றங்களை உள்ளங்கை நெல்லிக் கனியாக மாற்றிவிடும். அது மட்டுமல்ல செய்யுள் செய்வதென்பது, யாப்பிலக்கண அறிவுத் தேர்ச்சியால் ஏற்படுத்தப்படும் ஒன்றல்ல, அது இறைவன் அளித்த ஒரு கொடை. ஒருவரது உள்ளக் கிடக்கை சந்தத்துடன் வெளிப்படும்போது செய்யுள் பிறக்கின்றது. இந்த வகையில் இத்தலியில் பிறந்து, தமிழகம் புக்கு, முத்தமிழ் கற்ற முனிவர் தனக்குள்ள செய்யுளாற்றலால் பல இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவற்றின் விபரங்கள்:

01. தேம்பாவணி - இதன் விபரத்தை வேறு இடத்திற் காண்க

02. அர்ச் கித்தேரி அம்மாள் அம்மானை 1947 ஜெ.ஜி.சுந்தரம் உரை, நொபிலி பிரஸ் மதுரை 154 பக்கங்கள் - இறைக் குருவானவர் உரை, கழகப் பதிப்பு 1972. 165 பக்கங்கள்

03. திரிக்காவலூர்க் கலம்பகம்
04. அன்னை அழுங்கல் அந்தாதி
05. தேம்பாவணியின் பாடல்கள்
06. வண்ணம்
07. வாமன் சரித்திரம்
08. அடைக்கல் மாதா வெண் கலிப்பா
09. திருப் பாவணி வீரமா முனிவரின் பிரபந்தங்களின் திரட்டு

**தொடரும்...**

கனடாவிலிருந்து.......... **ஈழத்துப் பூராடனார்**

# கிறீஸ்தியானி வணக்கம்

கிறீஸ்தியானி வணக்கம் என்பது தமிழில் வெளிவந்த பழமையான கிறீஸ்தவ நூல்களில் ஒன்றாகும். இது நானூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டது. 1579 செப்டம்பர் மாதத்தில் மார்க்கோஸ் ஜோர்ஜ் என்பவர் போர்த்துக்கீச மொழியில் எழுதிய 'DOCRINA CHRISTAM' என்ற நூலைத் தமிழாக்கம் செய்து கிறீஸ்தியானி வணக்கம் என்னும் தலைப்புடன் என்றிக் என்றிக்ஸ் என்னும் இயேசு சபை மறைப் பணியாளர் கேரளாவில் உள்ள கொச்சினில் அச்சிட்டு வெளியிட்டார். இதற்கு முன்பே வெளிவந்த 'தம்பிரான் வணக்கம்' என்ற நூல் முழுவதையும் உள்ளடக்கியதுடன் மேலும் சில விளக்கவுரைகளையும் சேர்த்து 12 அத்தியாயங்களும் 122 பக்கங்களும் கொண்ட நூலாக இது வெளியிடப்பட்டது.

12 அத்தியாயங்களும் பின்வரும் தலைப்புகளில் அமைந்துள்ளன.

*01. கிறீஸ்தவன் யார்?*
*02. சிலுவை அடையாளம்*
*03. பரலோக மந்திரம்*
*04. பிரியத்தத்தினாலே மந்திரம்*
*05. கிருபைதயாபரத்து மந்திரம்*
*06. விசுவாசப் பிரமாணம்*
*07. விசுவாசச் சத்தியங்கள்*
*08. 10 கட்டளைகள்*
*09. திருச்சபைக் கட்டளைகள்*
*10. ஏழு தலையாய பாவங்கள்*
*11. தேவதிரவிய அனுமானங்கள்*
*12. இரக்கச் செயல்கள்*

பன்னிரண்டு அத்தியாயங்களின் தலைப்புகளைப் பார்க்கும்போதே இது இறைமக்களுக்கு மறை அறிவையும் செபங்களையும் கற்பிக்கும் நோக்கோடு எழுதப்பட்ட ஒரு மறைக்கல்விப் புத்தகம்போல் தோன்றுகிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(சிறுகதை)



# பனிச்சங்கேணியில் ஒரு பாடசாலை

• வாகரைவாணன்

கண்டல் மரங்களும், நொச்சி மரங்களும் பனிச்சங்கேணி ஆறு என்னும் பெண் மீது காலை வெயில் கூடப் படாமல் குழை என்னும் தங்கள் குடையைப் பிடித்துக்கொண்டு நிற்கின்றன. அந்தக் குளுமையில் குழைந்தவாறு ஆறு எனும் அந்த அணங்கு தனது அலைப் பாதத்தை மெல்ல மெல்ல எடுத்து வைக்கின்றாள். அப்போது கொலுசு குலுங்குவது போல் ஓர் ஓசை உண்டாகி எங்கும் இனிக்கிறது.

ஆற்றுப் பெண்ணின் நடையைக் கண்டு அழுக்காறு அடைந்ததாலோ என்னவோ எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுக்க, வட்டக் குடை பிடித்தபடி நண்டுகளும், கோடுகளால் தம் உடலை கோலம் செய்துகொண்ட மட்டுறால்களும் கரு வண்டன்களும் கரை ஓரமாக அணிநடை பழகுகின்றன. எங்கும் ஓரே அழகு... அமைதி... பனிச்சங்கேணி கிராமம் முழுவதும் அந்த அழகிலும் அமைதியிலும் கட்டுண்டு கிடக்கின்றது.

இயற்கையால் அலங்கரிக்கப்பட்ட கிராமத்திற்கு இது போதாதென்று எண்ணிய கடல்காற்று, தாழம் பூக்களிலிருந்து நறுமணத்தை வாரி எடுத்துக்கொண்டு வந்து அந்தப் பூமியெங்கும் கொட்டுகின்றது. அதனால் அந்தச் சுகந்தமே கிராமத்துப் பழந்தமிழ் மக்களின் சுவாசமாகின்றது.

இத்தனை அழகும் சுகமும் மிக்க இந்தக் கிராமத்தில் காட்டு மரந்தடிகளால் கட்டப்பட்டு காய்ந்த வைக்கோலால் வேயப்பட்ட அப்பாடசாலை உண்மையிலேயே ஒரு கொட்டில்தான். அதனால்தான் அதற்கு முன்னால் உள்ள பலகையில் எழுதப்பட்டுள்ள வாசகம் அதை ஒரு 'றோமன் கத்தோலிக்கப் பாடசாலை' என்று அடையாளப்படுத்துகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிரான்சு நாட்டில் இருந்து இங்கு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கத்தோலிக்கத் திருச்சபையின்
இயேசு சபைத் துறவிகளால்
ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை
ஓர் அகல் விளக்காகவே கிராமம்
முழுவதும் ஒளியை உமிழ்ந்து
கொண்டிருக்கிறது.
எவ்வளவுதான் அழகுத் திரவியம்
இங்கு குவிந்திருந்தாலும்
அறியாமை என்னும்
இருளுக்குள் கிராமம் முழுவதும்
மூழ்கிக் கிடப்பதைக் கவனித்த
கணபதிப்பிள்ளை வாத்தியார்,
இந்த விளக்கை எந்தச்
சூழ்நிலையிலும் அணையவிடக்
கூடாது என்று திடசங்கற்பம்
பூண்டவராய், பக்கத்தில் உள்ள
தமது கிராமம் வாக்கரையில்
இருந்து காலை ஆறு மணிக்கு
முன்பே மாட்டு வண்டியிலோ
அல்லது கால் நடையிலோ
பாடசாலைக்குப்
புறப்பட்டுவிடுவார். இடையில்
ஆற்றைக் கடத்தல்,
வாத்தியாருக்கு ஒரு
பிரச்சினைதான். ஆனாலும்
எப்படியாவது அக்கரை
சேர்ந்துவிடலாம் என்ற
நம்பிக்கை எப்போதும்
அவரோடிருக்கும்.

காலை வெளுக்கு
முன்பே கண் விழித்து எழுந்து
அடுப்பில் சாம்பல் அள்ளி,
நெருப்பு மூட்டி ஒரு சிறு மண்
பானையில் மனைவி தங்கம்மா
கோப்பிக்குத் தண்ணீர்
வைப்பதற்கிடையில்
பாடசாலைக்குச் செல்ல
ஆயத்தமாவிடும் வாத்தியார்,
மனைவி ஒரு கொத்துக்
கோப்பையில் கொண்டுவந்து
கொடுக்கும் கோப்பியை
மடமடவென்று குடித்துவிட்டு
பாடசாலைக்கு நடையைக்
கட்டுவார். பாடசாலையிலும்
படிப்பிப்பதிலும் தனது
கணவருக்கிருக்கும் பற்றுதலைக்
கண்ட மனைவி தங்கம்மா
"இந்த மனுசன் பள்ளி பள்ளி
எண்டு வீணாகப் பட்டினி கிடந்து
சாகப் போகுது" என்று
புறுபுறுக்காமல் மட்டும்
விடுவதில்லை.

சிலசமயம், இந்தப்
புறுபுறுப்பு வாத்தியாரின் மூத்த
மகள் செல்லம்மாவின் காதில்
விழும்போது ஒரு சிரிப்பு,
தானாக அவளிடமிருந்து
வெளிவரும்.

இடுப்பில் எட்டுமுழ மல்
வேட்டியும் நீண்ட கைச்
சேட்டுமாகக் கம்பீரத்தோடு
காட்சி தரும் கணபதிப்பிள்ளை
வாத்தியார் கையில் எப்போதும்
மகாபாரத ஏடும், சூடாமணி
நிகண்டும் இருக்கும். மாணவப்
பிஞ்சுகளுக்கு தமிழ்
நெடுங்கணக்கு, ஔவையாரின்
ஆத்திசூடி, கொன்றைவேந்தன்
ஆகியவற்றைச்
சொல்லிக்கொடுத்துக்கொண்டே,
அவர்களின் மன இயல்பிற்கேற்ப
மகாபாரதத்திலிருந்தும்
சுவையான கதைகளை
இடைக்கிடை
அவிழ்த்துவிடுவார்.
அந்தநேரம் பாடசாலை
ஒரு
அத்தினாபுரமாகவோ,
அல்லது
இந்திரப்பிரஸ்தமாகவோ
அவதாரம் எடுக்கும்.
சில சமயம்
குருஷேத்திரமாகவும்
அது ஊழித்
தாண்டவமாடும்.
அதனால் ஏற்படும்
பிரமிப்பில் மாணவர்கள்
தம்மையே
மறந்துவிடுவர்.

அது ஒரு
திங்கட்கிழமை. புனித
மிக்கேல் கல்லூரியின்
சிற்பியும்,
கத்தோலிக்கப்
பாடசாலைகளின் பொது
முகாமையாளருமான யேசு
சபைத் துறவி பேடினன் பொனல்
அடிகளார் ஒரு சைக்கிளில்
வந்து இறங்குகின்றார்.

துறவறம் பூண்டதே
கடுகளவும் சுயநலம் இன்றி
மக்கள் தொண்டாற்றவே
என்னும் உண்மையை
வெளிச்சம் போட்டுக் காட்டுவது
போல அறுபதைக் கடந்த
நிலையிலும் மட்டக்களப்புப்
பட்டினத்திலிருந்து
முப்பத்தொன்பது
மைல்களுக்கப்பால் உள்ள
பனிச்சங்கேணி கிராமத்திற்கு
சைக்கிள் சவாரி செய்துவந்த
அந்த வெள்ளைத்தோல்
மனிதரை ஒரு வேடிக்கைப்
பொருள் போல் ஊர் மக்கள் சிலர்
சுற்றி நின்று பார்க்கின்றார்கள்.

அண்ணாந்து
பார்க்கவேண்டிய உயரம்.
மெலிந்த உறுதியான உடற்கட்டு.
ஒட்ட வெட்டப்பட்ட தலைமயிர்;
நெஞ்சத்தைத் தொட்டு



"உங்கள் வேலைகோரும்
போராட்டத்தை அமைச்சர் வந்து
பார்த்தாரே! ஏதாவது பலன்
கிட்டியதா?"

"அவரும் எங்களுடன் சேர்ந்து
உட்கார்ந்துவிட்டார்"

• மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விளையாடும் வெண்ணிறத் தாடி; எதையும் ஊடுருவிப் பார்க்கும் நீலம், சாம்பல் கலந்த கண்கள்...

அபூர்வமான இந்த இலட்சணங்களோடு கூடிய ஆளுமை வாய்ந்த அந்தத் தாடிக்காரச் சுவாமிக்கு ஏற்கனவே கணபதிப்பிள்ளை வாத்தியார் அறிமுகமானவராதலால் சிறிதுநேரம் கூடத் தாமதியாது தமது மாணவர்களுடன் விரைந்து சென்று அவர் தாழ் பணிந்து தோத்திரம் சொல்லி அன்புடன் பாடசாலைக்கு அழைத்து வருகின்றார்.

பிரெஞ்சு நாட்டில் பிறந்து வளர்ந்த கத்தோலிக்க யேசு சபைத் துறவியானாலும், இலங்கை மட்டக்களப்பில் கால் வைத்ததும் இத்தாலி நாட்டுத் துறவி பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் போல தமிழரோடும் தமிழ் மொழியோடும் நன்கு நெருக்கமாகிவிட்ட பொனல் அடிகளார் வாத்தியாருடனும் மாணவர்களுடனும் ஒரு தமிழனாகவே தமிழில் உரையாடுகின்றார். பாடசாலை வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட ஒருவராக அதன் தேவைகளைக் கேட்டறிகின்றார். தான் மாணவர்களுக்கெனக் கொண்டு வந்த பாடசாலை உபகரணப் பொருட்கள் சிலவற்றை அவர்களிடம் கையளித்து ஒரு தந்தை போலச் சிரித்து மகிழ்கின்றார். வாத்தியாரின் உற்ற நண்பனாகவே அவரோடு பழகுகின்றார்... கதைக்கின்றார்...

வயது முதிர்ந்த நிலையிலும் தூர இடங்களுக்கும் சைக்கிளில் சென்று தனது கடமைகளைச் சிறப்புடன் நிறைவேற்றும் துறவி பொனல் அடிகளாரின் செயலும் பேச்சும் வாத்தியாருக்குப் பெரும் பிரமிப்பையும் அவர்மீது மிகுந்த மரியாதையையும் ஏற்படுத்துகின்றன. அதேநேரம் உரையாடலின்போது அவர் அழுத்திச் சொன்ன, "மட்டக்களப்பில் எதிர்காலத்தில் பெரிய பெரிய பாடசாலைகள் உருவாகலாம்... ஆனால், அதற்கெல்லாம் பனிச்சங்கேணி பாடசாலை போன்ற பாடசாலைகள்தான் அத்திவாரம் என்பதை வருங்காலம் மறக்கக் கூடாது" என்னும் வார்த்தைகளை வாத்தியாரின் மனம் மீண்டும் மீண்டும் அசை போடுகின்றது. அதில்தான் எத்தனை உண்மை....!

# மரணமே நெருங்காத பாடல்


அ.ச.பாய்வா

மரணமே நெருங்காத பாடலே!
மன அழுத்தங்களின் கலவையான
கருப்பையிலிருந்து நீ உருவானாய்
சரித்திரத்தின்
உயிரற்ற எலும்புத் துளைகளுக்கூடாக
மீண்டும் உயிர் கொடுக்க...

உனது பெயரால் புரியப்பட்ட
அத்தனை குற்றங்களையும்
வரிசைப் படுத்திவிட்டுப் போ
எத்தனை வாட்கள்
எத்தனை கத்திகள்
எத்தனை துப்பாக்கிகள்
எத்தனை மனிதப் புதைகுழிகள்

என் காதுகளைச்
செவிடாக்கிக் கொண்டேன்
உன்னுடையதை மட்டும் கேட்க...

மரணமே நெருங்காத
நீ மட்டும் பாடிக்கொண்டேயிரு....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள்
## நேற்றும் இன்றும்

கடந்த இதழ் தொடர்ச்சி...

### ஒன்பதாவது மாநாடு பற்றிய அறிவிப்புக்கு வரவேற்பு

ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு பற்றி அறிவிப்பு வெளியாகிய சில நாட்களுக்குள்ளாகவே இந்தியாவின் பிரபல நாளிதழ்களில் ஒன்றாகிய தினமணி தனது ஆசிரிய தலையங்கத்தில் இந்த அறிவிப்பை மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளது. "இதனினும் இனியதொரு செய்தி இருக்க முடியாது. பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு கோவையில் நடைபெறும் என்கிற அறிவிப்பு உண்மையிலேயே தேன் வந்து காதில் பாய்ந்த உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. இப்போது பாரதி இருந்திருந்தால் துள்ளிக் குதித்திருப்பார். பாரதிதாசன் வாழ்ந்திருந்தால் வாழ்த்தி மகிழ்ந்திருப்பார். தவத்திரு தனிநாயம் அடிகள் கேட்டிருந்தால் பேருவகை அடைந்திருப்பார். இந்த ஒரு செய்தியைக் கேட்கத்தானே தமிழ் நெஞ்சங்கள் ஒரு மாமாங்கமாகத் துடித்தன" என்று எழுதியிருந்தது.

அதேபோன்று அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் தமிழ்ச் சங்கமும் இந்த அறிவிப்பை வரவேற்று அறிக்கை விட்டுள்ளது. இந்த அமைப்பின் தலைவர் அல்பேட் செல்லத்துரை, செயலாளர் பிரகாஸ் எம்.சுவாமி ஆகியோர் இணையத்தளம் ஊடாக விடுத்துள்ள அறிக்கையில், "இந்த அறிவிப்பானது அமெரிக்காவில் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் இந்த மாநாடு 4 மாதங்களுக்குள் நடாத்தப்படவேண்டுமென நாம் மிகவும் ஆவல் கொண்டிருந்தோம்" எனக் குறிப்பிட்டிருந்தனர்.



"பட்டதாரி ஆசிரியர் வேலைகோரும் போராட்டத்தில் நீ ஏன் கலந்துகொள்ளவில்லை?"

"நான் பின்கதவால் போய் நியமனம் பெற்றுவிட்டேன்"

● மணி

### விமர்சனங்களை எதிர்கொள்ளும் மாநாடு

இந்த மாநாடு பற்றிய அறிவிப்பு வெளியானதை அடுத்து வழக்கம் போலவே எதிர்ப்பும் விமர்சனமும் எழுந்துள்ளது. "ஈழப்போராட்டங்களைத் திசை திருப்பவே உலகத் தமிழ் மாநாட்டை தமிழக முதல்வர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்" என்று தமிழின உணர்வாளரும் 'நாம் தமிழர்' இயக்கத் தமிழருமான இயக்குனர் சீமான் குற்றம் சாட்டியுள்ளார். ஈழத் தமிழரின் இன்றைய அவலம் உலகம் அறிந்ததொன்று. வாழ்வா சாவா என்ற நிலையில் இருந்த வன்னி மக்களைக் காப்பாற்றுமாறு தமிழகத்திலும், புலம்பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாடுகளிலும் எத்தனையோ போராட்டங்களை மேற்கொண்டபோது கண்டுகொள்ளாமல் இருந்த இந்திய மத்திய அரசாங்கம் மற்றும் சர்வதேச சமூகம் போன்றவை இந்த மாநாட்டை நடத்தாமல் புறக்கணிப்பதால் மட்டும் மனம் மாறிவிடுமா?

வழக்கம் போலவே அ.அ.தி.மு.க செயலாளர் செல்வி ஜெயலலிதா அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் அனுமதியில்லாமல் கருணாநிதி ஒன்பதாவது மாநாடு பற்றிய அறிவிப்பை மேற்கொண்டமை கண்டிக்கத்தக்கது என அறிக்கை விட்டுள்ளார். இதுபோன்று இன்னும் பல குறைகளைப் பலரும் கூறலாம். அரசியல்வாதிகள் எப்போதும்போல் ஒருவரை ஒருவர் சாடுவதிலும் குறை காண்பதிலும் தங்கள் நேரத்தைச் செலவிடுகின்றனர். ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகக் குறை சொல்லிக்கொண்டிருப்பது ஆரோக்கியமான மனநிலையாக அமையாது; அரசியல் நாகரிகமாகவும் இருக்காது.

## அரசியல் சாயம் கலக்கக் கூடாது

தனிநாயக அடிகளாரின் காலத்திற்குப் பின்னர் நடைபெற்ற மாநாடுகளில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநாடுகளில் அரசியல் வாடை அதிகம் வீசியதாகக் கருத்துகள் கூறப்படுகின்றன. ஆட்சியில் இருக்கும் தமிழ்நாட்டு அரசாங்கங்கள் தம்மை முதன்மைப்படுத்தி தமது கட்சி சார்ந்த பிரசாரங்களை மேற்கொள்ள இந்த மாநாடுகளைக் களமாகப் பயன்படுத்திக் கொண்டன என்ற குற்றச் சாட்டும் தமிழறிஞர்கள் சிலரிடம் இன்றுவரை நிலவுகின்றது. இறுதியாகத் தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது மாநாட்டில் இலங்கையிலிருந்து மாநாட்டில் பங்கெடுக்கச் சென்ற தமிழறிஞர்களுக்கு ஜெயலலிதா அரசாங்கம் தமது பாதுகாப்பைக் காரணமாகக் காட்டி அனுமதி மறுத்திருந்தமை மிகுந்த வேதனையளிக்கும் விடயமாக அமைந்திருந்தது.

எனவே ஒன்பதாவது மாநாடு தி.மு.க.வின் புகழ் பாடும் மாநாடாக அமையாமல் தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, அறிவியல் தமிழ் போன்ற பல்வேறு துறைகளில் ஆரோக்கியமான ஆய்வு இடம்பெறும் களமாக அமையவேண்டும். உலகம் முழுதும் பரந்து விரிந்து கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் ஒட்டுமொத்தப் பார்வையும் கோவையை நோக்கிக் குவிய இருக்கிறது. எனவே, இந்நேரத்தில் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுகளுக்கு இடம்கொடுக்காமல் தமிழக எதிர்க்கட்சிகளும் உலகத்தின் ஏனைய தமிழ்ச் சமுதாயங்களும் ஒன்றுபட்டு ஓரணியில் நின்று மாநாட்டின் வெற்றிக்காக உழைக்கவேண்டும் என்பதே தமிழை நேசிக்கும் ஆர்வலர்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாகும்.



## அன்னை திரேசாவின் 100வது பிறந்தநாள்

வாழும் புனிதை என்று போற்றப்பட்ட மறைந்த அன்னை திரேசாவின் 100வது பிறந்தநாள் 2010ம் ஆண்டு கொண்டாடப்படவுள்ளது. அதற்கு ஆயத்தமாக இவ்வாண்டு முதல் நூற்றாண்டு நிகழ்ச்சித் திட்டத்தை அச்சபைக் கன்னியர்கள் முன்னெடுத்துள்ளனர்.

கடந்த மாதம் ஓகஸ்ட் 26ம் திகதி இடம்பெற்ற திருப்பலி ஒன்றில் ‘அன்னை திரேசாவின் நூறாவது பிறந்தநாள் இன்று ஆரம்பமாகிறது’ என கொல்கொத்தாவின் இளைப்பாறிய பேராயர் மேதகு ஹென்றி டி சொய்சா தெரிவித்திருந்தார்.

## தனிநாயகம் அடிகளாரின் பங்களிப்பு நினைவுகூரப்படவேண்டும்

தனிநாயகம் அடிகளாரின் மறைவுக்குப் பின்னர் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வுகளில் அடிகளாருக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படாமல் அவருடைய ஆரம்ப முயற்சிகள் மறக்கப்பட்டுவிட்டதோ என்ற அங்கலாய்ப்பு ஈழத் தமிழரிடம் இருந்தது. இந்நிலையில் இந்தியாவின் தினமணி ஏட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அண்மையில் வெளியான ஆசிரியத் தலையங்கம் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, தனிநாயகம் அடிகளின் பணியை அறிந்த அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக அமைந்துள்ளது. "ஒன்பதாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுத் திடல் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பெயரால் வழங்கப்படவேண்டும்" என்ற தலைப்பிலான அந்த ஆசிரியத் தலையங்கம் முக்கியதொரு கருத்தையும் சுட்டிக் காட்டியுள்ளது. "ஒரு மொழிக்காக உலகளாவிய மாநாடு நடத்தும் முதல் முயற்சிக்குச் சொந்தக்காரர் தவத்திரு தனிநாயகம் அடிகள்தான். உலகிலேயே தமிழ் மொழிக்கு உலகளாவிய மாநாடு நடத்தப்பட்ட பிறகுதான் சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளுக்கு மாநாடுகள் நடந்தன" என்று அது சுட்டிக்காட்டியுள்ளது.

ஈழத்தமிழரின் வாழ்வியல் உரிமை வலியுறுத்தப்படவேண்டும்.

15ஆண்டுகளுக்குப் பிறகு தமிழின் பெயரால் உலகத் தமிழ் அறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் ஒன்றுகூடும் இச்சந்தர்ப்பத்தில் ஈழத் தமிழரின் இன்றைய அவலம் நினைவுகூரப்பட்டு இடம்பெயர்ந்த மக்களின் விரைவான மீள்குடியேற்றமும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் வலியுறுத்தப்படவேண்டும். அனைத்துலகத் தமிழரும் ஏற்றுக்கொண்டுள்ள ஈழத் தமிழரின் வாழ்வியல் உரிமை, தாயகக் கோபாடு மீண்டும் வலியுறுத்தப்படவேண்டும். ஈழத் தமிழரின் தொன்மை, பூர்வீகம் போன்றவை இம்மாநாட்டில் ஆதாரங்களோடு ஆய்வு செய்யப்பட்டு வெளிக்கொண்டுவரப்படவேண்டும். இந்த இக்கட்டான காலகட்டத்தில், ஈழத் தமிழரின் இருப்பே கேள்விக்குறியாகி விடுமோ என்ற அச்சம் நிலவும் சூழ்நிலையில், இம்மாநாடு ஈழத் தமிழர் தொடர்பான வரலாற்று உண்மைகளை அறிவியல் ரீதியாக உலகத்திற்கு உணர்த்தவேண்டும்.

## நிறைவாக...

"வெறும் புகழ்ச்சிக்காகவோ, காரணமின்றிப் போற்றுவதற்காகவோ நாம் தமிழாராய்ச்சியில் இறங்குவதில்லை. ஆராய்ச்சியாளனின் நோக்கம் உண்மையைக் கண்டுபிடிப்பது, உண்மையைப் புலப்படுத்துவது, மறைந்திருக்கும் உண்மைகளை அகழ்ந்தெடுப்பது" என



"யானைக்குட்டிகளைத் தாயிடமிருந்து பிரித்துவிடவேண்டுமென்று சட்டம் கொண்டுவந்திருக்கிறார்களே!"

"வன்னி அகதிகளை அப்படித்தானே செய்திருக்கிறார்கள்"

• மணி

தமிழாராய்சி மாநாடுகளின் நோக்கங்கள் பற்றித் தனிநாயகம் அடிகள் குறிப்பிடுகின்றார். இதை மாநாட்டு அமைப்பாளர்களும், பங்கேற்கும் தமிழறிஞர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்திய அரசினால் தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து (Classical Language State) வழங்கப்பட்ட பிறகு இடம்பெறும் முதல் தமிழாராய்ச்சி மாநாடாக ஒன்பதாவது மாநாடு அமையப்போவதால் தமிழுலகம் பெரிய எதிர்பார்ப்போடு இந்த மாநாட்டை உற்று நோக்குகின்றது. உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் இட்மபெற்றுவரும் மொழியியலின் புதிய பரிமாணங்களை (The New Dimensions of Linguistics) இம்மாநாடு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இன்றைய உலகத்தின் மாற்றங்களுக்கு தமிழ் தன்னை இசைவாக்கிக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் இம்மாநாடு ஆராயவேண்டும். தமிழர்களின் செழிப்பு மிக்க பண்பாட்டு மரபுகளை இம்மாநாடு இன்றைய உலகத்திற்கு வெளிச்சம்போட்டுக் காட்டவேண்டும்.

– அருள்திரு. தமிழ்நேசன் அடிகள் –




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## குப்புறப் படுத்துச் செய்யும் ஆசனங்கள்

### மகராசனம்



### செய்முறை

- ஓய்வாகக் கால்களையும், கைகளையும் நீட்டி குப்புறப் படுக்கவும்.
- வலது கையை மடித்து இடது தோள்பட்டையின் மீது வைக்கவும்.
- கைகள் இரண்டும் உங்கள் கழுத்துக்கு அணைப்பாக இருக்கட்டும்.
- முகத்தை கைகளின் இடையே வைத்து நெற்றிப் பொட்டை கைகளின் மீது அழுத்தி வைக்கவேண்டும். அல்லது படத்தில் காட்டியதுபோல் நாடியை கைகளுக்கு இடையே வைக்கவும்.
- இரண்டு கால்களையும் விரித்து வைக்கவேண்டும்.
- கண்கள் மூடியிருக்கவேண்டும்.
- மூச்சை நன்றாக இழுத்து விடவேண்டும். சில வினாடிகள் இவ்வாறு செய்வது நல்லது.
- பின் கால்களை ஒன்று சேர்த்து கைகளைப் பிரித்து நீட்டவேண்டும்.
- வலது அல்லது இடதுபுறமாகப் புரண்டு எழுந்து அமரவேண்டும்.

### இதனால் ஏற்படும் பலன்கள்

- உடலை ஓய்வு நிலைக்குக் கொண்டுவந்து மீண்டும் ஆசனம் செய்ய உதவுகின்றது.
- பதட்டம், படபடப்புகள் மறைந்து மனதுக்கு சாந்தி அளிக்கிறது.
- மன அழுத்தம், மன இறுக்கம் போன்றவை மறைந்து நல்ல அமைதி கிடைக்கின்றது.
- உடல் வலிகளைப் போக்கி சுறுசுறுப்பைத் தருகின்றது.
- கை, கால், தசைகள், நெஞ்சு, வயிற்றுப் பகுதிகள் சீரான ஓய்வுநிலையைப் பெறுகின்றன.

### தீரும் நோய்கள்

- அடி முதுகுவலி, கழுத்துவலி, இடுப்புவலி போன்றவை மறையும்.
- நுரையீரல் பலவீனமானவர்களுக்கு அதிக பலனையும் ஓய்வையும் தரும்.
- கண்வலி இல்லாமல் போகும்.
- இதய படபடப்பு, தூக்கமின்மை போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கும்.
- மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு அதிக பலனைத் தரும்.

### குறிப்புகள்

- சாந்தியாசனம் போல் இதுவும் ஓய்வுநிலையாசனமாகும்.
- கைகளைத் தளர்த்தி முகத்தை இடதுபக்கம் அல்லது வலது பக்கம் சரித்து வைத்தும் செய்யலாம்.
- விரும்புபவர்கள் உங்களுக்கு வசதியான முறையிலும் ஓய்வு எடுக்கலாம். பின் படிப்படியாக ஆசன நிலைக்கு வரவேண்டும்.
- ஓய்வுநிலை ஆசனம் என்பதால் மாற்று ஆசனம் இல்லை.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அஸ்மா (Asthma) நோயாளிகளே! தெரிந்துகொள்ளுங்கள்!

Dr. Sebaretnam Francius Almeda
Medical Officer
Teaching Hospital
Batticaloa

அஸ்மா நோய் பரவலாக எம்மிடையே சிறியோர், பெரியோர் வேறுபாடின்றி பரந்துபட்ட நீண்டகால நோயாக காணப்படுகின்ற நிலையில் அதன் உருவாக்கமும், குணங்குறிகளும், பாதிப்பும் அதற்கான பொருத்தமான சிகிச்சை முறை, அதனைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றித் தெரிந்துகொள்ளுதல் எம்மிடையே மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதன் அடிப்படையில் அஸ்மா நோய் பற்றிய சில தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.

## அஸ்மா நோய் என்றால் என்ன?

மனிதனின் சுவாசப் பையில் உள்ள சுவாசக் குழாய்களில் அசாதாரண சுருக்கத் தன்மை காரணமாக ஏற்படுகின்ற குறைபாடே அஸ்மா (Bronchaial Asthma) ஆகும்.

சுவாசக் குழாய்களின் உள்ளிடம் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒடுக்கமடைகின்றது.

அவையாவன:

01. சுவாசக் குழாயின் சுவரிலுள்ள தசைச் சுருக்கம்
02. சுவாசக் குழாயின் உள் மென்சவ்வின் வீக்கம்
03. சுவாசக் குழாயில் அதிகளவு சுரப்புத் தேங்குதல்

மேற்கூறிய இக்காரணிகள் ஒன்றிணைந்து சுவாசக் குழாய்களின் உள்ளிட துவாரத்தின் அளவைக் குறைக்கும். இதனால் உட்சுவாசத்தின்போது நாம் உள்ளெடுக்கும் காற்றின் அளவு குறைவடைய வெளிச்சுவாசத்தில் குறிப்பிட்ட அளவு தடை ஏற்பட மூச்சுத் திணறல் ஏற்பட்டு சுவாசிப்பதில் கஷ்டம் ஏற்படுகின்றது. இந்நிலையே அஸ்மா என அழைக்கப்படுகின்றது.

## அஸ்மாவை உண்டுபண்ணும் காரணிகள் யாவை?

01. ஈரப்பதனான காற்று
02. தூசிகள்
03. அதிக வியர்வை
04. நாய், பூனை, பறவைகள் போன்ற வீட்டுப் பிராணிகளின் உடலில் காணப்படுகின்ற ஒருவகைக் காரணி
05. புகைத்தல்
06. ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவுவகைகள். அவையாவன: (இறால், நண்டு, கணவாய், தக்காளிப்பழம், கத்தரிக்காய், சூரை மீன், கீரி மீன், சில மாப்பதார்த்தங்கள்)
07. சீரான உறக்கமின்மை
08. யோசித்தல், கவலைப்படல்
09. உடற்பயிற்சி (சிலவேளைகளில்)
10. பரம்பரையாக

இவைகள் எமது சுவாசக் குழாய்கள் ஒடுக்கமடைவதற்கு காரணிகளாக உள்ளன. இவை தவிர அவரவர் உடல்நிலைக்கு ஏற்ப நிலைமைக்கேற்றவாறு அஸ்மா நோய் ஏற்படலாம். எனவே ஒரே காரணி எல்லா நோயாளிகளிலும் அஸ்மா நோயை உண்டுபண்ணும் என்று கூறமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அஸ்மாவின் பொதுவான குணங்குறிகள் யாவை?


01. பெரும்பாலான நோயாளிகளில் ஆரம்ப அறிகுறியாக மாலை வேளையில் அல்லது இரவு வேளையில் தொண்டை அரிப்புடன் கூடிய இருமல்.
02. வெள்ளையான இழுபடும் நிலையிலுள்ள சளி உருவாக்கம்.
03. கண், காது, தொண்டை அரிப்பு
04. அடிக்கடி மூச்செடுத்தல்
05. இளைப்பு, களைப்பு
06. சுவாசிப்பதில் கஷ்டம் (குறிப்பாக வெளிச்சுவாசம் அதிக கஷ்டமானது)

இவை தவிர நோயின் தீவிரத்தைப் பொறுத்து உடற்சோர்வு, பசியின்மை, மயக்கம், நெஞ்சுப் படபடப்பு உட்பட்ட பிற குணங்குறிகளும் ஏற்படலாம்.

## அஸ்மாவிற்குரிய சிகிச்சை முறைகளாவன

01. நோயைத் தூண்டுகின்ற காரணிகளை இனங்கண்டு அவற்றைத் தடுப்பதே சாலச் சிறந்த சிகிச்சை முறையாகும். எனவே 75 வீதம் குணமாகக்கூடிய சந்தர்ப்பம் வைத்தியரிலோ, மருந்துகளிலோ அல்ல, நோயாளிகளிலேயே தங்கியுள்ளது. மிகுதி 25 வீதமே வைத்தியரிலும், பாவிக்கும் மருந்துகளிலும் தங்கியுள்ளது. எனவே நோயாளியின் பங்களிப்பே அஸ்மா நோய் குணமடைய முக்கிய காரணியாகும். அதாவது ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடிய உணவு வகைகளையும், சந்தர்ப்பங்களையும், செயன்முறைகளையும் தவிர்த்துக்கொள்ளுதலே முக்கியமான தடுப்பு முறையாகும். இது தவிர வைத்தியரினால் வழங்கப்படுகின்ற மருந்துகள் பின்வருமாறு அமையலாம்.

01. ஊசி மருந்துகள்
02. மாத்திரைகள்
03. திரவப் பதார்த்தங்கள்
04. பவுடர், ஆவிபரப்பாக (Inhalation) பயன்படுத்துதல்




## எது சிறந்த மருந்துமுறை?

நோயின் தன்மைக்கேற்ப அனைத்து வழிமுறைகளும் சிறந்தவையே. இருப்பினும் மருத்துவ ஆய்வுகளின்படியும் வைத்தியர்களின் ஆலோசனைகளின்படியும் ஒப்பீட்டளவில் பவுடராக, ஆவிபரப்புள்ள (Inhabition) மருந்துவகைகளே சிறந்தவையாகும்.

எம்மிடையே பலர் ஆவி பரப்புள்ள (Inhalation Pump) மருந்துகளைப் பாவிப்பது உயிர் ஆபத்தை ஏற்படுத்தலாம் என்ற மூடநம்பிக்கை கொண்டுள்ளோம். உண்மையில் அது தவறானது. ஆவிபரப்புள்ள மருந்துகள் பின்வரும் அனுகூலங்களைக் கொண்டிருக்கும்.

01. நேரடியாக சுவாசக் குழாய்களினுள் சென்றடையும்.
02. ஒப்பீட்டளவில் விரைவான செயற்பாடு.
03. மிகக் குறைந்த செறிவே போதுமானது.
04. இலகுவாகக் கையாளப்படக்கூடியது.
05. மிகக் குறைவான பக்கவிளைவுடையது.
06. அடிக்கடி வைத்தியரை நாடவேண்டிய தேவை இருக்காது.

எனவே, ஒப்பீட்டளவில் ஆவி பரப்பான மருந்துகளை Pump முறை மூலம் (Inhalar) உள்ளெடுப்பதனால் இலகுவில் அஸ்மாவை குணமாக்க முடியும். எனவே வைத்தியரின் ஆலோசனைப்படி அவரின் வழிகாட்டலுக்கு இணங்க உரிய மருந்தை உரிய அளவில் உரிய காலத்திற்கு ஆவி பரப்பான நிலையில் (Inhalation) பாவித்து அடிக்கடி அஸ்மா நோயின் பாதிப்பைத் தவிர்ப்பதன் மூலம் நோயின் தாக்கத்திலிருந்து விடுபடுவதுடன் நோயற்ற உடல் நலத்துடன்கூடிய வளமான எதிர்காலத்தைச் சுவைப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## சத்தியத்தின் பாதுகாவலர்கள்

திருச்சபை வரலாற்றில் முதல் 3 நூற்றாண்டுகளும் மிகக் கொடூரமான காலப்பகுதி ஆகும். அதிலும், இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டு காலப்பகுதிகள் துன்புறுத்தல்களையும் பல பேதகங்களையும் எதிர் கொண்ட காலம் ஆகும். இக்காலத்திலும் இறைவன் அறிவும், பேச்சுத் திறனும், எழுத்தாற்றல்களும் நிறைந்த தந்தையர்களை திருச்சபைக்குக் கொடுத்தார். இவர்களும் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள், ஆளுனர்கள், கலாபனைக்காரர்கள் முன் சென்று கிறிஸ்தவர்கள் சார்பாகத் துணிவுடன் வாதாடினார்கள்.

அக்காலத்தில் உரோமைய அஞ்ஞான அறிஞர்கள், கல்விமான்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும், அவர்கள் விசுவசிக்கும் வேத சத்தியங்களை எதிர்த்தும், துண்டுப் பிரசுரங்களை எழுதியும் சிறு நாவல்களை எழுதியும் கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரம் செய்தனர்; தப்பறைகளைப் போதித்தனர். இத்தகைய பொய்ப் பிரசாரங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் கிறிஸ்தவ விசுவாச சத்தியங்களின் உண்மைகளைக் காரணம் காட்டி பல நூல்களை எழுதினார்கள். பேதகங்களைத் தோற்றுவிப்பவர்களுக்கெதிராய்க் கிறிஸ்தவ விசுவாசச் சத்தியங்களின் படிப்பினைகளைச் சரியாக விளக்கிக் கூறினார்கள். இவ்வாறு விசுவாச சத்தியங்களை நியாயம் கூறி ஆதரித்துப் பாதுகாத்தபடியால் இவர்களே "சத்தியத்தின் பாதுகாவலர்" என அழைக்கப்பட்டனர். (அப்ரோஜிஸ்ற்) இவர்களுள் புனித யுஸ்தின், புனித இரேனியுஸ், அலெக்சாந்திரிய சாந்தப்பர், தேர்த்தூலியன், ஒரிஜன், புனித சிப்பிரியான் போன்றோர் முக்கியமானவர்கள்.

**• புனித யுஸ்தின் (110 -167)**

கிரேக்க அஞ்ஞானப் பெற்றோருக்கு மகனாய்ப் பிறந்த இவர் உண்மையைத் தேடி பல ஆண்டுகளாய் அலைந்து இறுதியில் 144இல் கிறிஸ்தவ மறையில் உண்மையைக் கண்டார். சிறந்த அறிவாளியும், தத்துவ சாஸ்திரியுமான இவர் கிறிஸ்தவத்தை ஆதரித்து, பல நூல்களையும் வெளியிட்டு, அவர்களுக்கு விரோதமான குற்றச்சாட்டுகளையும் எதிர்த்து எழுதினார். பல அஞ்ஞானிகளும் இவருடைய நூல்களைப் படித்து ஒளியின் மக்களாயினர். உரோமையரின் பல தெய்வ வழிபாட்டை எதிர்த்தார். கிறிஸ்தவர்களின் ஆதியும் அந்தமும் அற்ற இறைவனையும், அவரிடமிருந்து பிறந்த இயேசுக் கிறிஸ்துவையும் அவருடைய போதனைகளையும் நிலைநாட்டினார். எதிர்பார்த்திருந்த மெசியாவின் வருகையுடன் மோசேயின் சட்டம் வலுவற்றுப் போனது எனக் கூறினார். இறையியலில் ஏற்பட்ட வளர்ச்சிகளை இவருடைய நூல்களில் காண முடிகிறது.

**• புனித இரேனியுஸ் (135 - 202)**

லையன்ஸ் நகரில் 25 ஆண்டுகள் ஆயராகப் பணி புரிந்தார். அறிவும், விவேகமும், புகழும் உடையவரான இவர் பேதகங்களை எதிர்த்து பல நூல்களை எழுதினார். "பேதக மறுப்பு" எனும் 5 புத்தகங்கள் கொண்ட நூலை எழுதினார். நோஸ்டிக்கேயப் பேதகத்திற்கு எதிராய் எழுதப்பட்டதே இந்நூல்களாகும்.

**• அலெக்சாந்திரியா சாந்தப்பர் (150 - 216)**

அஞ்ஞானத்தில் பிறந்து கிறிஸ்தவத்தைத் தழுவிய இவர் கல்வித் திறமையும், வாய்ச் சாதுரியமும் உடையவராவார். கிரேக்க அறிவுரை, கிறிஸ்தவ அறிமுகம், ஆன்மீக வாழ்வின் இரகசியம் எனும் 3 முக்கிய நூல்களை எழுதினார். இந்நூல்கள் மூலம் நல்ல கிறிஸ்தவன்தான் உண்மையனான அறிவாளி என எண்பித்தார்.

**• தேர்த்தூலியன் (160 - 240)**

ஆபிரிக்காவில் ஒரு நூற்றுவத் தலைவனுக்கு மகனாய் "கால்தேஜ்" எனுமிடத்தில் பிறந்தார். பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று சட்டத்

தொடர்ச்சி 17ம் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உலக அதிசயங்கள்

## ஒரு வரலாற்று ஆய்வுக் கண்ணோட்டம்

அண்மைக் காலங்களில் தாஜ்மஹால், பிரான்சிய சாய்கோபுரம், இங்கிலாந்து பிக்பென் (Big Ben) கடிகாரம், சீனப் பெருமதில், எகிப்திய பிரமிட்டுகள், பபிலோனிய தொங்கு தோட்டம் ஆகியன உலகின் ஏழு அதிசயங்களாக மாணவர்களுக்குப் புகட்டப்பட்டு வருகின்றன.

உலக அதிசயங்கள் கலை வண்ணத்தோடு கூடியவை. இவை வேறு, மனித சாதனைகள் வேறு. இன்று மனிதனை பிரமிப்புக்கு உட்படுத்தும் விஞ்ஞானச் சாதனைகள் ஏராளம் உண்டு.

உலக அதிசயங்கள் ஏழு என கி.மு. 2ம் நூற்றாண்டில் அக்கால அறிஞர்கள் வரையறை செய்தனர். அவ்வரையறையைப் பற்றி நாம் இங்கு ஆராயவில்லை. அன்றைய வரையறைப் படி பிரமிட்டுகளும், அழிந்துபோன பபிலோனியத் தொங்கு தோட்டமும் உலக அதிசயங்களில் கொள்ளப்படுகின்றன.

இவற்றோடு பின்னர் குறிப்பிடும் ஐந்து அதிசயங்களும் அன்றைய உல்லாசப் பயணிகளைக் கவர்ந்தன.

**அந்த ஏழு அதிசயங்கள் பின்வருமாறு:**

### எகிப்திய பிரமிட்டுகள் (Pyramids)

இவை இன்றும் நிலைத்திருக்கின்றன. இவை பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு எகிப்திய மன்னர்களின் சமாதியாக அமைந்திருந்தன. கீசா (GIZA) என்ற இடத்தில் மூன்று சம பிரமிட்டுகள் உள்ளன. இந்த கூர்நுதிக் கோபுரம் ஒன்று சுமார் 20 மில்லியன் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்லின் எடையும் சுமார் 600kg கொண்டது. கீசா என்ற இடத்தில் கருங்கற்கள் கிடையாது. தொலைவிலிருந்து இவை கொண்டுவரப்பட்டிருக்கவேண்டும். கணித அளவுகோல்கள் பிசகாது பிரமிட்டின் உச்சிவரை இக்கற்களைக் கொண்டுசெல்வது சாதாரண விடயமல்ல. சுமார் 20,000 தொழிலாளர்கள் துணையோடு 20 ஆண்டுகள் கடின உழைப்பை மேற்கொண்டு இதனைக் கட்டி முடித்தனர். எத்தனையோ பொறியியல்விற்பன்னர்கள் மேற்பார்வை செய்திருக்கவேண்டும்.

உலக அதிசயங்களில் மற்றொன்று பபிலோனியத் தொங்குதோட்டமாகும். பபிலோனிய இளவரசர் Nebuchadnezzar கி.மு 600ம் ஆண்டில் இதை நிர்மாணித்தார். இந்தத் தோட்டம் படி மட்டங்களாக பிரமிட் போன்ற முறையில் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு படிமுறையிலும் உலகின் பல பாகங்களிலிருந்தும் மரங்களும்,

அருட்சகோ. எஸ்.ஏ.ஐ.மத்தியு FC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


பபிலோனியத் தொங்குதோட்டம்


எகிப்திய பிரமிட்டுகள்

பூக்கன்றுகளும் இருந்தன. கட்டிட அமைப்பை மரங்களும் பூங்கொடிகளும் மறைத்ததால் அது ஒரு தொங்கு தோட்டம்போல் காட்சியளித்தது. அவ்வரசன் நிர்மாணித்த வேறு பிரமாண்டமான மதிலையும் உலக அதிசயமாகச் சிலர் கொண்டனர். இம்மதிலின் உயரம் 335 அடி. இப்பொழுது பூமி அதிர்வில் அழிபாடுகளாகக் காணப்படுகின்றன.

தொடரும்

15ம் பக்கத் தொடர்ச்சி...

தரணியாய் விளங்கிய இவர் 195ல் கிறிஸ்தவத்தைத் தழுவி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 'இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை' எனவும் அழைக்கப்பட்டார். இறையியல் சம்மந்தமாய் பல நூல்களையும் எழுதியுள்ளார். இவற்றில் முக்கிய மானது "அப்பொலஜெற்றிக்" எனும் நூல். இது ஆபிரிக்காவிலிருந்து ஆளுனர்களுக்கு எழுதப் பட்டது. மேலும் போதகர்கள் வேதாகமத்தைத் திரித்துக் கூறுவதாகக் கூறி, திருச்சபை ஒன்றே இதற்கு விளக்கமளிக்கவேண்டும் எனவும் கூறி யுள்ளார்.

**• ஒரிஜன் (185 - 254)**

அலெக்சாந்திரியாவில் கிறிஸ்தவப் பெற் றோருக்குப் பிறந்தார். மறைக்கல்விக் கூடத்தில் அலெக்சாந்திரியா சாந்தப்பர் என்பவரிடம் கல்வி கற்றார். அக்கல்லூரியிலே அதிபரானார். "இரும்பு மனிதர்" எனவும் அழைக்கப்பட்டார். வேதாகமம், ஞானவாழ்வு, இறையியல் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். கலாபனைகளின்போது கிறிஸ்தவர் களைச் சிறையில் சந்தித்து ஆறுதலும் கூறியுள்ளார். வேதாகமம் பற்றிய உண்மைகளை - நூலின் 6 மொழிபெயர்ப்புகளை 6 சமாந்தரப் பந்திகளில் நிரல் படுத்தி எழுதி வேதாகம ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவினார்.

**• புனித சிப்பிரியான் (210 - 258)**

கால்தேஜ் பட்டணத்தில் அஞ்ஞானப் பெற் றோருக்கு மகனாகப் பிறந்தார். இளமையிலே இலக்கி யங்களையும், சாஸ்திரங்களையும் கற்று, பின் பிர சித்தி பெற்ற வாக்கலங்கார சாஸ்திர நிபுணராக விளங்கினார். 245ல் மனம் மாறி, தப்பறைகளைக் களைந்து, திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவினார். 249ல் கால்தேஜ் ஆயராய் நியமிக்கப் பட்டார். அதிக நூல்களை இலகுவாகவும், மக்க ளுக்கு விளங்கக்கூடிய விதத்திலும் எழுதினார். தேசியனுடைய கலாபனையில் விசுவாசத்தை மறு தலித்தவர்கள் பாவப் பரிகாரம் பெற்று மீண்டும் திருச்சபையில் சேர வழிசெய்தார். திருச்சபையில் பாப்புவின் தலைமைத்துவத்தை வலியுறுத்தி எழு தினார். இவ்வாறு அனைத்து சத்தியத்தின் பாது காவலர்களும் விசுவாசச் சத்தியங்களை எடுத்துக் கூறி, ஆதரித்துப் பாதுகாத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' இம்முறை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதம பாதுகாப் பதிகாரி திரு.வல்லிபுரம் சிவலிங்கம் அவர்களைச் சந்தித்தோம். இவரைப் பற்றி பெயர் குறிப்பிடாமல் 'இலக்கிய மஞ்சரி'யில் ஒரு முறை குறிப்பிட்டிருந்தோம். அடிமட்டத்திலிருந்து படிப்படியாக உயர்ந்த விடாமுயற்சியுள்ள மனிதர் இவர். ஏனையோருக்கு முன்மாதிரிகையாக விளங்கும் இவரை, அவரது அலுவலகத்தில் சந்தித்தோம்.

**✽ உங்களைப் பற்றிச் சற்றுச் சொல்லுங்கள்...**

☀ எனது பெயர் வல்லிபுரம் சிவலிங்கம். நான் களுதாவளை என்னும் கிராமத்தில் 1958ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் நாள் பிறந்தேன். எனது தகப்பனார் ஒரு தபால் ஊழியர். நாங்கள் எல்லாமாக ஐந்து பிள்ளைகள். நான் செட்டிபாளையம் என்னும் அழகிய கிராமத்தில் திருமணம் செய்துகொண்டுள்ளேன்.

**✽ நீங்கள் 82ம் ஆண்டு பாதுகாப்பு உத்தியோகத்தராக மட்டக்களப்பு பல்கலைகழக கல்லூரியில் இணைந்து கொண்டீர்கள். எவ்வாறு பிரதம பாதுகாப்பு அதிகாரி என்ற நிலைக்கு உயர்ந்தீர்கள்?**

☀ அது ஒரு பெரிய கதை! 1982ம் ஆண்டு பெப்ரவரி 26ம் திகதியன்று சாதாரண பாதுகாப்பு உத்தியோகத்தராக நான் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இணைந்துகொண்டேன். அக்காலத்தில் இது பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைக் கப்பட்டு மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் இயங்கியது. ஐந்து ஆண்டுகளின் பின்னர் பாதுகாப்புப் பரிசோதகராகப் பதவியுயர்வு பெற்றுக் கொண்டேன். மீண்டும் ஐந்தாண்டுகள் சேவையின் பின்னர் பலத்த போட்டிகளின் பின்னர் பிரதம பாதுகாப் அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்று, சுமார் பதினைந்து ஆண்டுகளாக அப்பதவியில் உள்ளேன். பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பிரதம பாதுகாப்பதிகாரி ஆகியோரெல்லாம் உயர்தர அதிகாரி களாகக் கணிக்கப்படுவர்.

**✽ அது சரி! பிரதம பாதுகாப் பதிகாரி ஒருவர் பட்டம் பெற்றவராக இருக்கவேண்டும். நீங்கள் க.பொ.த (சா.த) தகுதியுடன் நியமனம் பெற்றவர். அப்படியானால் எப்படி நீங்கள் இப்பதவியைப் பெறமுடிந்தது?**

☀ எல்லாம் என் சுயமுயற்சியும், கடவுளின் அருளும்தான் காரணம். நான் க.பொ.த (சா.த) தகுதியுடன் தொழிலைப் பெற்றுக்கொண்டேன் என்பது உண்மைதான். நான் பதவியேற்று சில ஆண்டுகளில் உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன. இரவுநேரக் கடமைகளில் பல் கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே இருக்கவேண்டிய நிலைமை. மின்விளக்குக் கம்பங்களின் கீழிருந்து உயர்தரப் பாடங்களைப் படித்தேன். அதில் சித்தி யடைந்தேன். பின்னர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவனாகப் பதிந்து கொண்டேன். ஐந்து நாட்களும் இரவுபகலாகக் கடமை புரிவேன், பின்னர் சனி, ஞாயிறு தினங்களில் மட்டக்களப்பு விபுலானந்தா வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்லூரியில் வகுப்புகளுக்குச் செல்வேன். ஞாயிறு இரவுதான் வீடு செல்வேன். மறுநாள் வேலைக்கு வந்துவிடுவேன். இவ்வாறு பட்டப் படிப்பை முடித்துக்கொண்டேன். பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கோரியிருந்தபோது அதற்கான தகைமையாக பாது காப்பு உத்தியோகத்தர் ஒருவர் பட்டதாரியாக இருப் பின் விண்ணப்பிக்கலாம் அல்லது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அதற்குச் சமனான தகை மையுடைய பாதுகாப்புப் படையினர் (இராணுவ, கடற்படை, விமானப்படை) விண்ணப்பிக்கலாம் என்று இருந்தது. நான் விண்ணப்பித்தேன்; தெரிவு செய்யப்பட்டேன்.

**✽ இப்போது ஏதாவது படிக் கின்றீர்களா?**

☀ ஆம்! முதுகலைமாணி இறுதித் தேர்வுக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறேன்.

**✽ நீங்கள் பதவி உயர்வு பெற் றதும் பல சங்கடங்களைச் சந் தித்ததாகக் கேள்விப்பட்டோமே! அவை உண்மையா?**

☀ (சிரிக்கின்றார்) ஆம்! பல்வேறு வகையினராலும் பல்வேறுவகைப்பட்ட சங்கடங்களை அனுபவித்தேன். அதிலொன்றை மட்டும் குறிப்பிடலாமென நினைக் கின்றேன். எனது நியமனத்திற்கு எதிராக வழக் கினைக்கூட சிலர் போட்டார்கள்.

**✽ ஏன் வழக்குப் போட் டார்கள்?**

☀ தெரியவில்லை! எனது நியமனம் முறையற்றது என்று எண்ணினார்கள். எனது மேலதிகாரிகளாக இருந்த சிலருக்கு மேலதிகாரியாக நான் பணிபுரிய வேண்டியிருந்தமை சிலவேளை அவர்களுக்குச் சங் கடமாய் இருந்திருக்கலாம். என்றாலும் பிற்காலத்தில் அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து விட்டார்கள்.

**✽ உங்கள் பணிக்காலத்தில் மறக்கமுடியாத சம்பவங்கள் என்ன?**

☀ எல்லாமே மறக்கமுடியாதவையே! அடிமட்ட சராசரி மனிதனாக இருந்தவன் இந்தளவு உயர்ந் தமையே மறக்கமுடியாத ஒன்றுதான். இது ஆண வத்தால் வந்த வார்த்தைகள் அல்ல, அடக்கமாகச் சொல்ல விரும்புபவை.

**✽ நீங்கள் ஒரு சமாதான நீத வான் என்று அறிகின்றோமே...?**

☀ ஆமாம்! அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக உள்ளேன்.

**✽ உங்கள் வெளிநாட்டுப் பயணங்கள் பற்றி...**

☀ அப்படிப் பெரிதாக ஒன்றுமில்லை. தாய்லாந் திற்கு ஒரு முறையும், சிங்கப்பூரிற்கு ஒரு முறையும், இந்தியாவுக்குச் சுமார் ஐந்து தடவைகளும் சென்று வந்துள்ளேன்.

**✽ நீங்கள் 'தொண்டன்' வாச கர்களுக்குச் சொல்ல விரும் புவது என்ன?**

☀ விடாமுயற்சி, அர்ப்பணம், இலட்சியம் என்பன இருந்தால் நாம் முன்னேறலாம். அப்போது பொரு ளாதாரமும், சமூக அந்தஸ்தும் எம்மைத் தேடி வரும்.

**✽ உங்கள் நேரத்தை ஒதுக்கி எம்முடன் கலந்துரையாடிய மைக்கு நன்றி!**

☀ நன்றி! வணக்கம்!

**- ஆழியோன் -**



## குறும்(புப்)பா - 28

மயில்வாக னம்மறைந்தார் மண்ணில்
மடைதிறந்த நீர்மக்கள் கண்ணில்
உயில்தேடி உடைந்தது பல்கைகால் இன்னும்
உடல்போக வில்லையிடு காடு

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனவுகள் உதிர்கிறபோது...

– பைந்தமிழ்க்குமரன் டேவிட் –



மாணிக்கப்பிள்ளையார் கோயில் சந்தி, வாள் மாத்தும் சந்தி, கல்யாணி கலியாண மண்டபம், தாளவட்டான் செக் பொயின்ற், ஆதார வைத்தியசாலை என்று ஒன்றன்பின் ஒன்றாக மறைந்துகொண்டிருக்க அந்தச் சிறிய டொல்பின் வேன் கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தது. கீதா ஒரு சீற்றில் சிந்தனை வயப்பட்டவளாக முடங்கிக் கிடந்தாள். அவளின் அக்கா ஜெயாவின் மடியில் மூன்று வயதுக் குழந்தையான மிருணா படுத்துக் கிடந்தாள். அருகில் அவளது கணவன். மறுபுறம் ஓ.எல் படிக்கும் தம்பி, நரைத்துப்போன தலைமுடியுடன் தகப்பன், உருக்குலைந்துபோன தாய் இவர்களுடன் சிவராம் மாமா. கீதாவுக்குக் கிடைத்த வாழ்க்கை பற்றிப் பல எதிர்பார்ப்புகள் கொண்டதாக அவர்களது உரையாடல் சென்றுகொண்டிருந்தது. அவளுடைய சிந்தனைகள் அவளையுந் தாண்டி சிறகு விரித்துப் பறந்தன.

மாட்டுச் சாணம் மெழுகிய தரை, ஓலை வீடு, முற்றத்தை மூடியிருக்கும் மல்லிகைப் பந்தல், புதிதாகப் பாளை தள்ளிய தென்னம்பிள்ளைகள், காய்த்துத் தொங்கும் விலாட் மரம், கோடிப் புறம் செழித்து நிற்கும் கறிவேப்பிலைக் கன்று, வேலியோரத்துக் கோழிக்கூடு, அம்மா போன கிழமைதான் இறக்கிவிட்டிருந்த பஞ்சுப் பந்துகள் போன்ற பதினொரு கோழிக் குஞ்சுகள், அம்மன் கோயிலடி அரசமரம், அதன் வேரில் குந்திக்கொண்டு கச்சான் விற்கும் கிழவி, எதிர் வீட்டு சடைநாய்க்குட்டி இவைகள்அவள் இமைகளுக்குள் வந்து வந்து போயின.

பல வருடங்களுக்கு முன்பே அந்நிய நாடுகளில் குடியேறிப்போன ஆண்களுக்கு இங்கிருந்து மணப்பெண்களை ஏற்றுமதி செய்யும் கலாசாரமொன்று பரவிவிட்ட நிலையில் கீதாவும் வெளிநாட்டு மணமகனின் கை பிடிக்கப் போகின்றாள். உண்மைகள் தெரியாமல் இங்கு வாழும் உறவுகளின் நற்சான்றிதழ்களை நம்பி சிவராம் மாமாவின் தூதுப் பணியில் ஏற்பாடாகியதுதான் இந்த மாப்பிள்ளை.

"நம்மட பிள்ள கீதாவின்ர படத்த அனுப்பினம்தானே அவன் பொடியன் தனக்கு அழகு வடிவு வேணாம், நல்ல அடக்கமும் பொறுமையுமான ஒரு படிச்ச புள்ள போதும் எண்டு ரெலிபோனில சொன்னவனாம். இனி உங்கட குடும்ப நிலமைக்கி இது கடவுளாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாத்துச் செய்த பெரிய புண்ணியம்" என்று சிவராம் மாமா சொல்ல பூரித்துப் போன உறவுகள் அவளை வழியனுப்ப சம்மதித்துவிட்டன.

வாவென்றழைக்கும் புதிய பந்தத்திற்கும் கை காட்டும் பழைய வாழ்க்கைக்குமிடையே தாமரையிலைத் தண்ணீராக அவள் மனம் அல்லாடிக்கொள்ள தலைநகரை வந்தடைந்தாள். அம்மா அள்ளியணைத்து அழுதாள். அப்பா கண்கலங்க, அக்கா ஆறுதல் கூற, தம்பி தவிப்புடன் அவள் கையைப் பிடிக்க அக்காவின் குழந்தையை தூக்கக் கலக்கத்துடன் கொஞ்சிவிட்டு விமானநிலையத்தின் பளபளக்கும் மாபிள் தரையையும், பளிச்சிட்ட மின்விளக்குகளையும், நுனிநாக்கில் புரளும் ஆங்கிலத்தையும் வியந்தபடி விமானம் ஏறினாள். அவள் உள்ளம் மட்டும் மௌனமாக அழுதது. தினமும் மதியச் சோறு சாப்பிட்டுவிட்டு தட்டில் எஞ்சிய ஒரு பிடிச் சோற்றுடன் வேலியோரமாய்ப் போவாள். அங்கு அவள் வரவுக்காகத் தவம் கிடக்குமே அந்த வெள்ளைப் பூனைக்குட்டி. அதற்கு இனி யார் ஒருபிடிச் சோறு போடுவார்கள்?ஒருவேளை சாப்பாடு கிடையாமல் செத்துப் போகுமோ...? அவள் கண்கள் கலங்கின... மேகங்களைக் கலைத்தபடி பறந்த விமானம் அந்த அந்நிய நாட்டுத் தரையில் ஊர்ந்து அமைதியானது.

அவன் வந்திருந்தான். அங்கு எல்லா மனிதர்களும் புதியவர்கள். பேச்சு, இடம், சூழல்கள் எல்லாமே புதிதாக இருந்தன. கார் ஓடிக்கொண்டிருந்தது.

"கீதா உன்ர அப்பாவுக்குக் கடுமையான வருத்தமாமே... உன்ர அம்மாவுக்கும் கூட கால் முடியாம... அஸ்மா நோயும் எண்டு சொன்னாங்க... உன்ர அக்காவின்ர ஹஸ்பன்ற் மோசமான குடிகாரனாமே"

அவன் அவளது குடும்ப நிலையைப் பாடம் பண்ணியதுபோலக் கேட்டான். கண்கள் கலங்கியபடி தலையாட்டினாள்.

"ஓ.எல் படிக்கிற ஒரு தம்பிகூட இருக்கானாமே..." அதற்கு "ம்ம்..." என்றாள்.

"இஞ்ச பார் கீதா ஒரு வரிசத்துக்கு முன்னால பேமஸ் கொம்பனியொண்டுல சுப்பவைசர் ஜொப் எண்டுதான் அக்காவின்ர

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்
1911
நவம்பர்
15
மட்டக்களப்பு



விண்ணுலகில்
2008
நவம்பர்
11
திருகோணமலை

## அமரர். திரு. விக்டர் பல்தஸார்

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்கள ஓவசியர்)

தொன்னூற்றி ஏழு ஆண்டுகள் வாழ்ந்து
நல்ல தந்தையாக, கடமை தவறா ஊழியனாக,
பக்தியுள்ள பக்தனாக நல்வழி காட்டி
வாழ்ந்துகாட்டினாய்
எம்மைப் பிரிந்து ஓராண்டு சென்றுவிட்டது
உம் நினைவால் வாடுகின்றோம்
நித்திய வாழ்வில் இறை ஒளியில் சங்கமிக்க
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**மனைவி - பிள்ளைகள்**, 60/11, புனித மரியாள் வீதி, திருகோணமலை

பேரில இருந்த வயல்காணி, வளவு எல்லாம் வித்து மாசக் கணக்கில நாடு நாடா அலைஞ்சி இந்த நாட்டு வந்து சேர்ந்தன். ஹோட்டல்ல பிளேட்ஸ் கழுவுற வேலதான் கிடச்சிது. எப்பிடி எப்பிடியோ கஷ்டப்பட்டு இப்ப ஒரு நல்ல நிலையில இருக்கிறன். அங்க ஊரில அக்காவின்ர, தங்கச்சியின்ர கலியாணங்கள், சீதனங்கள், மாடி வீடுகள், வசதியான வாழ்க்கை எல்லாமே என்னால குடுக்க முடிஞ்சிது.

நா.. நான் என்ன சொல்ல வாறனெண்டா ஏமாற்றங்களத் தாங்கிக்கொண்டு நம்மள நம்பியிருக்கிற உறவுகளுக்காக வாழவேணும் என்ன விளங்குதா...?"

அவளின் கனவுகள் பலவிதமான கேள்விக் குறிகளினுள் சிக்கி மெல்ல மெல்ல உடைந்துகொண்டிருந்தன. அழகானதொரு பெரிய வீட்டின் போட்டிகோவில் கார் அமைதியானது.

"உன்ர லக்கேஜ் எல்லாம் எடுத்துக்கொண்டு இறங்கி வா" என்றான். ஓர் அறையைக் காட்டி ஓய்வெடுக்கும்படி கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிமிடங்கள் கரைந்தன. சில மணித்தியாலங்களில் பேச்சுக் குரல்கள், குழந்தை அழும் சத்தம் எல்லாம் கேட்டது. பொழுது விடிந்து சூழல் பரபரப்பாகிக்கொண்டிருந்தது. "கீதா..." என்றபடி கதவைத் தட்டினான்.

"இவதான் என்ர வைப்f லின்டா. இது எங்கட ஒரேயொரு குழந்தை. பேரு ரோஸி மூணு வரிசத்துக்கு முந்தியே நான் லின்டாவை மெரி பண்ணிட்டன். இது எங்க வீட்டாருக்குத் தெரியாது"

அவளுக்குத் தலை சுழன்றது. கால்களுக்குக் கீழாக பூமி நழுவியது. "அ...அப்ப...அப்ப.... நா..நான்... என்னய..எதுக்கு..."

"டோன்ட் வொறி... அவசரப்படாத... டேக் இற் ஈஸி..."

"ஹலோ" என்றாள் அவன் மனைவி லின்டா. அழகாக ஏன் அவளை விடப் பலமடங்கு அழகாக இருந்தாள். குழந்தை சொல்லவே தேவையில்லை அவ்வளவுக்கு ஆப்பிள் பொதிபோல இருந்தது.

"டார்லிங் ஸீ இஸ் அவ நியூ சேவன்ற் fபுறம் சிறிலங்கா" என்றான்.

அந்த ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றும் அவளின் எதிர்காலக் கனவுக் கோட்டைக்குள் வெடித்துச் சிதறி தரைமட்டமாகின.

"கீதா நாங்க ரெண்டு பேருமே ஜொப் செய்யிறவங்க. எங்கட ரோஸிய பராமரிக்கவேணும். இந்த வீடு வாசலக் கிளீன் பண்ணவேணும். இதுகளுக்காக ஒரு நல்ல சேவன்ற் எங்களுக்குத் தேவைப்பட்டுது. அதில நம்மட ஊர்ச் சமையல் செய்யக்கூடிய ஒரு கேள் கிடைச்சா மிச்சம் நல்லமெண்டுதான் ட்றை பண்ணினன்... சுறுசுறுப்பா வேலைகளைச் செய். உன்ர வீட்டு நிலமை எனக்கு நல்லாவே தெரியும். மெக்சிமம் சலறி தருவன்.." என்றபடி லின்டாவை அணைத்துக்கொண்டு அவர்களது பெட்ரூமுக்குள் நுழைந்தான்.

எழுதிமுடிக்காத கவிதை வரிகளாய்ப் பாதியில் கலைந்துபோன கனவுகளாய் அவள் வாழ்க்கை சிதிலங்களாகிப்போனது. ஓலைக் குடிசையும், சாணம் மெழுகிய தரையும், தன் பணக்கார வாழ்வு தரப்போகும் நிழலில் இளைப்பாறத் துடிக்கும் உறவுகளும் அவள் மனதில் வந்துவந்து மறைந்தன.

"அந்தக் குளிசைஅறுவத்திமூணு ரூவா புள்ள. ஒரு நாளைக்கு ரெண்டு போடட்டாம். நம்மட நிலமைக்கி இதெல்லாம்... எங்க.."

தந்தையின் கரகரத்த குரல் இன்னமும் காதில் கேட்கிறது. அவள் அந்த வீட்டைச் சுத்தமாக்கத் துடைப்பத்தைத் தேடினாள்.

## கணினி மயமான உலகில் குருவும் மறைப்பணியும் - இறைவார்த்தைப் பணியில் புதிய தகவல் தொடர்பு சாதனம்

### 2010ம் ஆண்டு உலகத் தொடர்பு தினச் செய்தி!



எதிர்வரும் அண்டு உலகத் தொடர்பு தினத்திற்கான செய்தியின் கருப்பொருளைத் திருப்பீடம் அறிவித்துள்ளது. 'கணினி மயமான உலகில் குருவும் மறைப்பணியும் - இறைவார்த்தைப் பணியில் புதிய தகவல் தொடர்பு சாதனம்' என்னும் தலைப்பில் 2010ம் ஆண்டு சமூகத் தொடர்பு தினத்திற்காக வெளியிடப்பட்டுள்ள இச்செய்தியில் இறைவார்த்தையை எடுத்துரைப்பதில் இன்றைய புதிய தொழில்நுட்பங்களை ஒரு நல்ல பலம் நிறைந்த உதவியாக நோக்கவேண்டும் என்றும் இன்றைய புதிய தொழில்நுட்பக் கலாசாரத்தில் எதிர்நோக்கப்படும் சவால்ளைச் சமாளிப்பதற்கான ஊக்கத்தையும் குருக்களுக்கு வழங்குவதாகத் தெரிவிக்கிறது இச்செய்தி. மேலும், கிறீஸ்துவை அனைத்து இடங்களுக்கும் எடுத்துச்செல்ல புதிய தொழில்நுட்பங்களின் உதவி குறித்தும் விபரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## கொட்டியாரக் கதைகள்

அண்மையில் பிரபல எழுத்தாளர் வ.அ.இராசரெத்தினம் அவர்களின் சிறுகதைத் தொகுப்பான "கொட்டியாரக் கதைகள்" என்னும் அருமையான வெளியீட்டை வாசிக்கக் கிடைத்தது. 1999ம் ஆண்டு வைகாசி மாதம் மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தால் இது வெளியீடு செய்யப்பட்டிருந்தது.
ஞா.சிவஞானசுந்தரம் என்ற இயற்பெயர் கொண்ட ஈழத்துச் சிறுகதை மூலவர்களில் ஒருவரான 'இலங்கையர் கோன்' அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. தனது இலக்கியக் குருநாதராக இவரையே வ.அ.இ அவர்கள் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திரு.வ.அ.இராசரத்தினம் அவர்கள் தன் பிறந்த மண்ணை எவ்வளவு நேசித்தார் என்பதை அவரது முன்னுரை அப்படியே வெளிக்காட்டுகின்றது. அவர் இவ்வாறு எழுதுகின்றார்.

"மகாவலி கங்கையின் இரு கிளைகளான குருக்கல் கங்கைக்கும், வெருகல் கங்கைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தை கொட்டியார்ப்பற்று என்று சரித்திர நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பிரதேசத்தின் பேரூர் கொட்டியாரம் என்றே வழங்கப்பட்டது. 17ம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் அதற்கு மூதூர் என்று பெயர் வந்தது. அந்த மூதூர்தான் நான் பிறந்த மண்.

இந்த மண்ணில் பிறந்தமைக்காக நான் பெருமைப்படுகின்றேன். ஏனென்றால்

'மகாவலியின் பேரால் வழங்கு மணி நதியும் காவும் பொழிலும் களிமுகமும் புள்ளணிந்த ஏரியும் மல்கி......' என்று விபுலானந்த அடிகள் பாடியிருக்கும் அடிகளுக்கு




அச்சாவாகப் பொருந்துவது இப்பிராந்தியமே. நீர் வளமும், நில வளமும், கடல் வளமும் உடையது எனது மண். இந்த மண்ணின் மகன் என்ற உணர்வே என் எழுத்துகளின் அடிநாதம். இம்மண்ணின் வனப்பையும், வளத்தையும் நேசிப்பதே என் யோகம்! இம்மண்ணின் மக்களது வாழ்வை இலக்கியமாக்குவதே என் நோன்பு. நான் எழுத ஆரம்பித்த நாட்களிலிருந்தே இத்தவத்தை இயற்றி வருகிறேன்.

இக்கதைத் தொகுப்பில் 1952 தொடக்கம் 1997 வரையுள்ள பதினாறு கதைகள் இடம்பெறுகின்றன. ஆனால், இத்தொகுப்பில் வெருகல் ஆற்றங்கரையை அண்மிய ஈச்சிலம்பற்றுக் கதைகள் இடம்பெறவில்லை. அக்கிராமங்களின் சூழ்நிலையிலும் பல கதைகளை எழுதியே இருந்தேன். ஆனால் அவை தற்போது என் கைவசம் இல்லை.

உள்நாட்டுப் போரின்போது என்னிடம் இருந்த என் எழுத்துகள் எல்லாமே தீக்கிரையாகின. அதன் பின்பு கொழும்பு சென்று தேசிய சுவடித் திணைக்களத்தில் மிகச் சிரமத்துடன் என்னுடைய கதைகள் சிலவற்றைத் தேடி எடுத்தேன். அவைகளில் ஈச்சிலம்பற்றைக் கதைகள் இல்லை. என் தேடுதல் இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்வதால் அடுத்து வரும் தொகுதிகளில் அவை இடம்பெறும்.

ஆனால் எத்தனை சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதினாலும்கூட, என் பிரதேசம் எனக்கு அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாகத்தான் இன்னமும் இருக்கிறது. ஈழத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரினால் என் பிரதேசமும் உருக்குலைந்துபோயுள்ளது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் கண்ட அமைதியையும், வளத்தையும், வனத்தையும் இன்றைக்குக் காணமுடியவில்லை. மாறாக வறுமையையும், விரக்தியையும், வேதனையையுமே இப்போது காண்கின்றேன். அவலங்களையே பார்த்துக்கொண்டிருப்பதால் மனம் மரத்துப்போய்விட்டது. என் வயோதிபத்தின் நெருக்குதல் இத்தனைக்கும் தாக்குப் பிடித்துநின்றே இலக்கியவாதியாக வாழவேண்டியுள்ளது. இந்த நிலயிற்றான் இத்தொகுப்பை வெளியிடுகின்றேன்.

அப்படிச் செய்கையில் மனதில் ஒரு நிறைவும் ஏற்படுகின்றது. இன்னமும் சில நூற்றாண்டுகளுக்குப் பின்வரும் சரித்திர மாணவன் இருபதாம் நூற்றாண்டின் பிற்கூறுகளில் கொட்டியாரப்பற்று எப்படியிருந்தது என்பதைத் தெரிந்துகொள்ள என் கதைகளைப் படித்தேயாக வேண்டும் என்ற மனநிறைவுதான் அது....”

என்றவாறு தன் முன்னுரையை அவர் கொண்டுசெல்கிறார். இன்று அவர் உயிரோடு இருந்திருந்தால் தன் ஊரைப் பற்றியும், இழந்துபோன தன் இரத்தங்களைப் பற்றியும் மேலும் வேதனைப்பட்டிருப்பார்.

இவரது முன்னுரையே இலக்கியமாகக் காணப்படுகின்றது. அப்படியானால் அவரின் கதைகள் எப்படியிருக்கும்? வாசித்தவர்களுக்கே அது புரியும்.

இக்கதைகளை வாசிக்கும்போது ‘செங்கை ஆழியானின்’ எழுத்துகள் ஞாபகம் வருகின்றது. வ.அ.வின் எழுத்துகள் அப்படியே யதார்த்தத்தை எடுத்துரைக்கின்றன. இத்தொகுப்பின் சிறுகதைகள் பற்றி இன்னொரு தடவை பார்ப்போம்.

## கடுகுக் கதை 21 நலைமுறை இடைவெளி

அன்ரன், தன்னுடைய அந்தச் சின்ன வளவுக்குள் வீடட்டின் முன்புறமாக பச்சைப் பசேல் என்று புல் வளர்த்து அழகாக வெட்டிவிட்டிருந்தார். அதற்கு உரம்போட்டு, மருந்தடித்து கவனமாக வளர்த்திருந்தார். அதைப் பார்க்கும்போது மனசெல்லாம் இலேசாகிவிடும். தோட்டம் செய்பவர்கள்கூட அவ்வளவு அக்கறை காட்டமாட்டார்கள்.

திடீரென்று அன்ரன் தன் குடும்பத்தினருடன் மூன்றுநாள் பயணமாகக் கொழும்பு செல்லவேண்டியிருந்தது. வீட்டிற்குப் பாதுகாப்பிற்காக (இதற்கும் பாதுகாப்பமைச்சிற்கும் தொடர்பில்லை) தனது வயதான மாமியாரையும் அவரது சகோதரியையும் விட்டுவிட்டுச் சென்றார்.

மூன்றாம் நாள் அதிகாலை குடும்பத்தினருடன் அன்ரன் வீடு திரும்பினார். வீட்டு முற்றம் பளிச்சென்று துப்புரவாக இருந்தது. மாமியார் சொன்னார், “என்ன மருமகன் வீட்டு முத்தமெல்லாம் புல்லாக் கிடந்தது.



கொத்தித் துப்பரவாக்கிப் போட்டம், இல்லாட்டி பூச்சி பட்டைகள் வந்திடும்”

அன்ரனின் இரத்த அழுத்தம் எகிறி இறங்கியது.

- பர்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# றொபட் நொக்ஸ் (1641 - 1720)

இலங்கையரான நாம் நம் நாட்டிலுள்ள சில இடங்களைப் பார்வையிடாமலும் பல விடயங்களைப் பற்றி அறியாமலும் இருந்தால் அது ஒரு குறைபாடாகக் கருதப்படவேண்டும் என்பதே எனது கருத்தாகும். 'சிவனொளிபாத மலையின்மேல் ஒருமுறை ஏறாதவனும் முட்டாள், இரண்டாவது முறையாக ஏறுபவனும் முட்டாள்' என்பது ஒரு சிங்களப் பழமொழியாகும். மிகவும் துன்புற்று அதை ஒரு முறையாவது பார்க்கவேண்டும் என்பது அதன் அர்த்தமாகும். சீகிரியா கொள்கையளவில் எட்டாவது உலக அதிசயமாக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதையும் ஒரு முறையாவது பார்க்காத கண்கள் எதற்கு என்று கேட்கத் தோன்றுகிறது.

அவ்வாறே றொபட் நொக்சை (1641 -1720) அறியாத ஒருவன் இலங்கையில் இருந்தால் அதுவும் துர்பாக்கியமாகவே எண்ணப்படவேண்டும். 17ம் நூற்றாண்டில் வாழ்ந்துவந்த நமது மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, சமய பண்பாடு பற்றி றொபட் நொக்ஸ் எழுதிய ஹிஸ்டோரிக்கல் றிலேஷன் ஒப் த ஐலண்ட் சிலோன் (The Historical Relation of the Island Ceylon - 1681) என்ற நூல் ஊடாகவே அறியக்கூடியதாக இருக்கிறது. கி.பி 4ம், 5ம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட மகாவம்சம், தீபவம்சம் போன்ற நூல்கள் பெரும்பாலும் வரலாற்று நூல்களாகவே அமைந்திருக்கின்றன.

றொபட் நொக்ஸ் 1659ம் ஆண்டில் அவருடைய தந்தையோடும் இன்னும் சில ஊழியர்களோடும் Ann என்ற கப்பலில் இந்தியாவை நோக்கிப் பயணம் செய்தபோது கடலிலே தாக்குதலுக்குள்ளாகி இலங்கையின் கொட்டியாரக்குடா (மூதூர்) துறைமுகத்தை அடைந்தனர். அப்பொழுது கிழக்கு மாகாணம் கண்டி மன்னனின் ஆட்சியின் கீழ் இருந்தது. றொபட் நொக்ஸ் ஏனைய பதினாறு பேர் கொண்ட குழுவோடு கொட்டியாரம் பகுதியில் ஒளிந்துகொண்டிருப்பதைக் கேள்வியுற்ற 2ம் இராஜசிங்க மன்னன் அவர்களைக் கைது செய்து கண்டிக்குக் கொண்டு சென்றான். றொபட் நொக்ஸ் அமர்ந்திருந்த மரத்தை நொக்ஸ் Tree என்று அழைப்பர்.

## தனிநாயகம் அடிகளின் பெயரில்...



உலகத் தமிழ் மாநாடு என்பது தவத்திரு தனிநாயகம் அடிகளின் எண்ணத்தில் மலர்ந்த அற்புதமான விடயம். ஒரு மொழிக்காக உலகளாவிய மாநாடு நடத்தும் முதல் முயற்சிக்குச் சொந்தக்காரர் தனிநாயகம் அடிகள்தான். உலகிலேயே தமிழ் மொழிக்கு உலகளாவிய மாநாடு நடத்தப்பட்டதற்குப் பின்புதான் சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளுக்கு மாநாடுகள் நடந்தன. ஆகவே, ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு நடக்கும்போது அந்தத் திடல் தவத்திரு தனிநாயகம் அடிகளின் பெயரால் வழங்கப்பட வேண்டுமென்று இந்தியாவின் பிரபல செய்திப் பத்திரிகையான தினமணி கோரிக்கை விடுத்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்த மரம் 1978ம் ஆண்டு சூறாவளியினால் விழுந்த பின்பு நொக்ஸ் மரத்திற்குப் பதிலாக வேறு ஒரு மரம் நாட்டப்பட்டது. றொபட் நொக்ஸ் நினைவாக இன்றும் அந்த மரம் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. றொபட் நொக்ஸ் சிறைக்கைதியாக்கப் பட்டபோது கிட்டத்தட்ட அவருடைய வயது 19. அவருடைய தந்தை மலேரியாவால் பாதிக்கபட்டு 1661ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இறந்தார். அதன் பின்பு காலப் போக்கில் அவரோடு இருந்த இன்னும் சிலர் இறந்து போயினர். றொபட் நொக்ஸ் தப்பிச் செல்வதற்கு முன்னதாக கண்டி இராசதானியில் 19 வருடங்களும் 06 மாதங்களும் 14 நாட்களும் வாழ்ந்திருக்கிறார். அவர் இலங்கையில் வாழ்ந்த போது ஓர் இலங்கையர் போல் வாழ்ந்திருக்கிறார் என்பது அவர் எழுதிய புத்தகத்திலிருந்து தெளிவாகின்றது. அவர் கமம் செய்திருக்கின்றார். சாரம் உடுத்தியதாகவும், வெறுங் காலோடு நடப்பது பழக்கப்பட்ட பின்பு இலகுவாக இருக்கிறது என்பது பற்றியும் கப்டனுடைய மகனாக இருந்த காரணத்தினாலும் ஆங்கிலேயர் என்ற பெருமையின் நிமித்தமும் இலங்கையின் எந்தவொரு பெண்ணையும் திரு மணம் செய்துகொள்ளவில்லை என்றும் பின்பு குறிப்பிடுகிறார்.

றொபட் நொக்ஸ் 1676ம் ஆண்டு 'தவுலுகல' என்ற கிராமத்திற்கு அருகாமையிலிருந்த எலதத்த என்ற ஊரிலிருந்து இறுதியாக குருநாகலினூடாக கப்பலில் அவரோடு வந்த இன்னொருவரான ஸ்டீபன் ருற்லன் (Stephen Rutland) என் பவரோடு ஒல்லாந்தருடைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குத் தப்பிச் சென்றார். ஒல்லாந்தருடைய கோட்டை ஒன்றான அரிப்பு என்ற இடத்தை வந்தடைந்தார்கள். அங்கிருந்து கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டார். அதன்பின் பட்டாவியா (BATAVIA) தற்போது ஜகார்த்தாவை வந்தடைந்தார்கள். அங்கிருந்து 'சீசர்' என்ற கப்பலில் 1680ம் ஆண்டு கிட்டத்தட்ட தன்னுடைய நாற்பதாவது வயதில் லண்டன் வந்தடைந்தார். அந்தப் பயணத்தின் போதுதான் வரலாற்றுப் பெறுமதிமிக்க "An Historical Relation" என்ற புத்தகத்தை எழுத ஆரம்பித்தார். அந்தப் புத்தகத்தை 1681ம் ஆண்டில் வெளியிட்டார். இந்தப் புத்தகம்தான் டானியல் டெவோவினுடைய றொபின்சன் குருசோ மற்றும் றொபேட் குக்கின் Royal Society என்ற புத்தகங்களுக்கு ஆதாரமாக உள்ளதென்று கூறப்படுகிறது. றொபட் நொக்ஸினுடைய இந்த நூல் 17ம் நூற்றாண்டில் ஒரு ஐரோப்பியரால் எழுதப்பட்ட மிகப் பெறுமதி வாய்ந்த நூல் என்று கருதப்படுகின்றது. 13 ஆண்டுகள் கிழக்கிந்திய நிறுவனத்தில் பணி புரிந்தார். பின்பு Ton Queen Merchant என்ற கப்பலில் 4 வருடங்கள் பணி புரிந்தார். 1694ல் அதிலிருந்து விலகி தன்னுடைய சொந்தக் கப்பலில் வியாபாரம் செய்தார். ஆனால் அது அவ்வளவு வெற்றிகரமாக அமையவில்லை. 1701ல் நிரந்தரமாகவே தனது சொந்த நாடான இங்கிலாந்துக்கு வந்தார். அவருடைய இறுதிக் காலத்தில் மேலும் இலங்கை பற்றியும் அவரது வாழ்க்கை பற்றியும் எழுதினார். அவர் செல்வம் மிக்கவராகவும், திருமணம் செய்யாதவராகவும் 1720ம் ஆண்டில் இறந்துபோனார். அவருடைய உடல் விம்பிள்டனில் அடக்கம் செய்யப்பட்டது. இந்த மாமனிதனுக்கு இலங்கை மக்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். இந்தப் புத்தகம் இல்லையென்றால் நமது நாட்டைப் பற்றிய பல விடயங்கள் இருளிலே இருந்திருக்கக் கூடும். றொபட் நொக்ஸ் என்ற பெயர் இன்று உலகம் பூராகவும் பிரசித்தி பெற்ற பெயராகவே இருக்கின்றது.

- அருள்பணி.
ஜோர்ஜ் திலீஸநாயக்கா -


AN
Hiſtorical Relation
Of the Iſland
CEYLON,
IN THE
EAST-INDIES:
TOGETHER,
With an ACCOUNT of the Detaining in Captivity the AUTHOR and divers other *Engliſhmen* now Living there, and of the AUTHOR's Miraculous ESCAPE.

Illuſtrated with Figures, and a Map of the ISLAND.

By *ROBERT KNOX*, a Captive there near Twenty Years.

*LONDON*,
Printed by *Richard Chiſwell*, Printer to the ROYAL SOCIETY, at the *Roſe* and *Crown* in St. *Paul's* Church-yard, 1681.

FACSIMILE OF TITLE PAGE OF 1681 EDITION





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15- 12 - 2009

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 82

(எண்ணிக்கை 18:1–16)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் ஆரோனிடம் "நீயும் உன் புதல்வரும் உன்னோடிருக்கும் உன் மூதாதையர் வீட்டாரும் திருஉறைவிடம் தொடர்பான குற்றத்தைச் சுமப்பீர்கள்; உங்கள் ........................................ தொடர்பான குற்றத்தையோ நீயும் உன்னோடிருக்கும் உன் புதல்வரும் சுமப்பீர்கள். லேவிக் குலத்திலுள்ள உன் சகோதரரையும் உன்னுடன் கூட்டிக்கொண்டு வர வேண்டும். அவர்கள் உங்களோடு சேர்ந்து, நீயும் உன்னோடிருக்கும் உன் புதல்வரும் உடன்படிக்கைக் ........................................முன்நிற்கும்போது உங்களுக்கு உதவி செய்யட்டும். நீங்களும் அவர்களோடு சாகாதபடி, திருஉறைவிடத்தின் பாத்திரங்களையோ பலிபீடத்தையோ அவர்கள் நெருங்குமாறு அனுமதிக்க வேண்டாம். அவர்கள் அனைத்து வேலைகளையும் கவனித்துக் கொள்வார்கள் வேறு எவரும் உங்களருகில் வரலாகாது. ........................................ மக்கள் மேல் என்றுமே சினம் இராதபடி திருஉறைவிடக் கடமைகளையும் பலிபீடக் கடமைகளையும் நீங்களே கவனிக்க வேண்டும். இதோ! லேவியரை நான் தெரிந்தெடுத்தேன்: சந்திப்புக்கூடார வேலைக்கு அர்ப்பணிக்கப்பட்ட கொடை ஆவர். நீயும் உன் ........................................ குருத்துவத்துக்குரிய அனைத்தையும் கவனியுங்கள். பணிபுரிய குருத்துவத்தையும் கொடையாகவே தருகிறேன். அவற்றை நெருங்குகிற வேறு எவனும் கொல்லப்படுவான். இதோ எனக்கென உயர்த்திப் படைக்கப்படும் ................................................ உன் பொறுப்பில் காக்கப்படும் அனைத்தையும் தந்து விட்டேன். இது உனக்கும் புதல்வருக்கும் நியமமாக விளங்கும். நெருப்புக்குட்படாத மிகப் புனிதப் பொருள்களில் உனக்குரியது இதுவே. அவர்கள் எனக்கு அர்ப்பணிக்கிற அவர்களின் படையல், ........................................ படையல், மிகவும் புனிதமானவை. மிகவும் தூய நிலத்தில் நீ அதனை உண்பாய். ஆரத்திப் படையல்களும் உன்னுடையவையே; இவை என்றுமுள்ள நியமமாக இருக்கும். உன் வீட்டில் தீட்டுப்படாத ஒவ்வொருவரும் அதிலிருந்து உண்ணலாம். ........................................ எண்ணெய், திராட்சை இரசம், உயர்தரத் தானியம் முதற்பலன்களையும் உனக்குத் தருகிறேன். நிலத்தின் முதற்கனிகளும் உன்னுடையதே. உன் வீட்டில் தீட்டுப்படாத ஒவ்வொருவரும் உண்ணலாம். மனிதராயினும் விலங்காயினும் முதலில் ................................................ திறக்கும் அனைத்திலும் படைக்கும் ஒவ்வொன்றும் உன்னுடையது. மனிதரில் தலைப்பேறானவனை நீ மீட்பாய். தீட்டான விலங்கின் தலையீற்றையும் நீ மீட்க வேண்டும். ஒரு மாத காலத்தில் நீ அவற்றை மீட்கும்போது மீட்புத்தொகை தூயக ................................................ நிறைப்படி ஐந்து வெள்ளிக் காசுகள் என்று விலை குறிப்பாய். அது பன்னிரண்டு ........................................ ஆகும்" என்றார்.

**விடைகள் : படையல்களில், உயர்தர, கருப்பை, செக்கேல், குருத்துவம், இஸ்ரயேல், கிராம், குற்றநீக்க, கூடாரத்தின், புதல்வரின்**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 82

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. தமிழிலக்கியத்தில் 'பாவேந்தர்' என அழைக்கப்படுபவர்
   (சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன், கோபாலகிருஷ்ண பாரதி)

2. இலங்கையில் தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்ட ஆண்டு
   (1972, 1975, 1969)

3. இலங்கையில் முதலாவது கிரிக்கட் போட்டி நடைபெற்ற இடம்
   (போஹம்பர அரங்கு, பிரேமதாசா அரங்கு, சரவணமுத்து அரங்கு)

4. உலகில் மிக நீண்ட கடல்பாலம் (36கி.மீ) உள்ள நாடு
   (அமெரிக்கா, ஜப்பான், சீனா)

5. இரக்கப் போனாலும் ..........................................................................
   (இரவில் போ, சிறக்கப் போ, மறைத்துப் போ)

6. 'கலகல என்று ஒலித்தது' என்னும் வாக்கியத்தில் கலகல என்பது
   (அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி, நிரை அசை)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 82
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# விடைகள்

## விவிலியம் கற்போம் - 80 விடைகள்

கூடாரங்களை, ஆபிரகாமும், தண்டனையே, பிளந்தது, எரிநெருப்பில், தூய்மை, ஆரோன், சந்திப்பு, கொள்ளைநோய், கொராகின்

## அறிவை வளர்ப்போம் - 80 விடைகள்

1) பலஸ்தீனம்
2) பிரித்தானியா
3) சனி
4) முன்னிலை வினைமுற்று
5) இளங்கோ அடிகள்
6) பருந்தாகுமா

## பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுவோர்**

- யதுஷி பெலிசியன்
  303/2, நீதிமன்ற வீதி
  திருகோணமலை
- ஜீ. சதுஷிகா
  இல:17A, புன்னைச்சோலை
  வீதி, அமிர்தகழி,
  மட்டக்களப்பு

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- இ. வினோத்
  174A, சூசையப்பர் புரம்
  சொறிக்கல்முனை
  சம்மாந்துறை
- டொமின்டன் அன்றாடோ
  2ம் ஒழுங்கை, மணற்சேனை
  கல்முனை

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 32 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 300/=**
  லெ.பி. அனபெல் டீ சௌசா
  508, அம்பாள் வீதி
  அன்புவழிபுரம்
  திருகோணமலை
- **இரண்டாம் பரிசு - 200/=**
  S.A. மேத்தா
  இல:27
  தாமரைக்கேணி வீதி
  மட்டக்களப்பு
- **3ம் பரிசு - 100/=**
  அ. லக்கி
  திருக்குடும்ப
  கன்னியர் மடம்,
  இறம்பைக்குளம்
  வவுனியா

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## டிசம்பர் - 2009

### கிறீஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு விழாக்களை ஒட்டி ஒலிபரப்பாகும் சிறப்பு நிகழ்ச்சிகள்

நாள்: 24 - நேரம் மாலை 7.00 மணி - **புதிய உலகம்**
கிறிஸ்து பிறப்பின் திருவிழிப்பு சிறப்பு மலர்
தயாரிப்பு - குருத்துவக் கல்லூரி மாணவர்கள் - கண்டி

நாள்: 25 - நேரம் மாலை 7.00 மணி - **புதிய உலகம்**
கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பு மலர்
தயாரிப்பு - குருத்துவக் கல்லூரி மாணவர்கள் - கண்டி
சிறப்புச் செய்தி - பேரருள்தந்தை. பொன்னையா ஜோசப் ஆண்டகை

நாள்: 26 - நேரம் மாலை 6.30 மணி - **புதிய உலகம்**
முதல் வேதசாட்சி விழா சிறப்பு மலர்
தயாரிப்பு - சமூகத் தொடர்பு அருட்பணி மையம் - மன்னார்
சிறப்புச் செய்தி - பெஸ்லியோ வாஸ்

நாள்: 27 - நேரம் மாலை 6.30 மணி - **புதிய உலகம்**
திருக்குடும்ப விழா சிறப்பு மலர்
தயாரிப்பு - சமூகத் தொடர்பு அருட்பணி மையம் - மன்னார்
சிறப்புச் செய்தி - A.G.இராஜேந்திரம்

நாள்: 28 - நேரம் மாலை 7.00 மணி - **புதிய உலகம்**
மாசில்லாக் குழந்தைகள் விழா சிறப்பு மலர்
தயாரிப்பு - T.அலோசியஸ்
சிறப்புச் செய்தி - ஸ்ரான்லி பிரபாகரன்

நாள்: 31 - நேரம் மாலை 7.30 மணி - **புதிய உலகம்**
நன்றி நாள் சிறப்பு மலர்
தயாரிப்பு - T.அலோசியஸ்
சிறப்புச் செய்தி - அருள்தந்தை. டக்ளஸ் ஜேம்ஸ்

நாள்: 01 (ஜனவரி - 2010) - நேரம் மாலை 7.00 மணி - **புதிய உலகம்**
புத்தாண்டு சிறப்பு மலர்
தயாரிப்பு - அருள்தந்தை. A.தேவதாசன்
சிறப்புச் செய்தி - அருள்தந்தை. ஜூலியன்

---

நிகழ்ச்சித் தொகுப்பு :
மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media